www.tamilarangam.net

# புதிய இளைஞன்

பிப்ரவரி-90




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## கார்ட்டூனிஸ்ட் சங்கரப்பிள்ளை நினைவாக




21






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இராமர் பெயரில்

# அரசியல் வர்த்தகம் நடத்தும் கள்ளஞானிகள்

## அயோத்தி இராமர் கோவில் தலைமைப் பூசாரி அம்பலப்படுத்துகிறார்

நாட்டில் ஒன்பது மாநிலங்களிலும் புதுவை யூனியன் பிரதேசத்திலும் சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடக்கவிருக்கும் நேரம்பார்த்து, அயோத்தியில் சர்ச்சைக்குரிய ராமர் கோயிலுக்கு பிப். 14-ம் தேதி அடிக்கல் நாட்டப் போவதாக பாரதீய ஜனதா கட்சியின் அரசியல் தரகு ஏஜெண்டுகளான ஆர். எஸ். எஸ்., விஸ்வ ஹிந்து பரிஷத் போன்ற மதவெறி அமைப்புகள் முதலில் அறிவித்தன. பின்னர் இந்தத் தேதியை ஒத்திவைப்பதாக அந்த அமைப்புகள் தெரிவித்தன. கடந்த நவம்பரில் நாடாளுமன்றத் தேர்தலின் போது ராமஜென்மபூமி பிரச்சினையைத் தீவிரப்படுத்தி அரசியல் ஆதாயம் தேடியதைப் போல், சட்டப் பேரவைத் தேர்தலிலும் 'கொள்ளை லாபம்' ஈட்ட தனது ஏஜெண்டுகளை ஏவிவிட்டுள்ளது பாரதீய ஜனதா கட்சி. இதற்காக மக்கள் மடிந்தாலும் அதற்கு மகிழ்ச்சியே. ஏனெனில், மக்கள் ஒற்றுமையாக வாழும் இடங்களில் மதச் சண்டைகளையும், ஜாதிப் பூசல்களையும் கிளப்பி, தங்கள் காலை ஊன்றிக் கொள்வதுதான் ஆர். எஸ். எஸ். போன்ற பாசிசக் கும்பலின் அரசியல் எஜமானர்களின் கேடுகெட்ட வழிமுறையாகும். இதைத்தான் கேரளத்திலும், தமிழகத்தில், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலும் அவர்கள் கடைப்பிடித்து வருகிறார்கள். அவர்களுக்கு இப்போது அகில இந்திய அளவில் அரசியல் ஆதாயம் தேட ராமஜென்ம பூமி விவகாரம் வாய்ப்பாகக் கிடைத்துள்ளது. ஏனெனில் மேற்கு வங்கம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களிலும் கூட தங்கள் நச்சுவலையை விரிக்க இது உதவும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். இவர்கள் இங்கு தூண்டிவிடும் வகுப்பு வெறியாட்டம் மேற்கு வங்க எல்லையையொட்டிய வங்கதேச மாவட்டங்களிலும் முஸ்லீம் மதப் பழைமைவாதிகள் மத்தியில் எதிர் விளைவுகளை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளதே இதற்குக்காரணம். இதைக் காட்டி, வங்க தேசத்திலிருந்து அகதிகளாக இங்கு வந்தவர்களில் இந்துக்களுக்கு மட்டுமே அகதி அந்தஸ்து அளிக்க வேண்டும். மற்றவர்களைத் துரத்தி அடிக்க வேண்டும் என்று பாரதீய ஜனதா கட்சி மேற்கு வங்கத்தில் இயக்கம் நடத்தத் தொடங்கியுள்ளது.

இவர்கள் மனித உணர்வுகளைப் பற்றி எள்ளளவும் கவலைப்படாமல், பிணக் குவியல்மீது நர்த்தனம் புரியத் துடிக்கும் நாஜிக் கூட்டம். இவர்களுக்கு மதமும் கடவுளும் அரசியல் வியாபாரத்துக்கான சரக்குகள். இதை நாம் கூறவில்லை. எந்த 'ராமஜென்மபூமி'யைத் தங்கள் அரசியல் வியாபாரத்துக்கு இவர்கள் பயன்படுத்தி வரு



*மதவெறி வேதாளங்களின் முகத்திரை மூலஸ்தானங்களிலேயே கிழிக்கப்படுகிறது*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிறார்களோ, அந்தக் கோயிலின் தலைமைப் பூஜாரி லால்தாஸ் என்பவரே, மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, அம்பலப் படுத்தியுள்ளார். அமைதிப் பூங்காவாகத் திகழும் அயோத்தியை இவர்கள் எப்படி வகுப்பு வெறியின் ஊற்றுக்கண்ணாக மாற்றத் துடிக்கிறார்கள் என்பதை அவர் ஆதாரங்களுடன் அடுக்கியுள்ளார். நாடெங்கிலும் ராமஜென்ம பூமியை முதலீடாக்கி கோடி கோடியாகக் கொள்ளையடிக்கும் இவர்கள், அந்த ஆலயப்பணியாளர்களை எப்படி பட்டினி போட்டு வருகிறார்கள் என்பதை அவர் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். அவரைச் சந்தித்தது பற்றி, 1986 ஜூன் 7-ம் தேதி 'கரண்ட்' பத்திரிகையில் அதன் ஆசிரியர் எழுதியிருப்பதைப் படித்துப் பாருங்கள்.

''அயோத்தி! அழுக்கடைந்த தெருக்களும், சாக்கடை வழிந்தோடும் சந்துகளும் நிறைந்த சிறிய நகரம். இங்கு 6000-க்கும் மேற்பட்ட கோயில்களும் 150 மசூதிகளும் உள்ளன. ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் வித்தியாசம் காண்பது கஷ்டம்.

அண்மையில் கதவுகள் திறக்கப்பட்ட பாபர் மசூதி—ராமஜென்ம பூமியில்தான் ஆள் நடமாட்டம் ஓரளவு அதிகம் உள்ளது. கர்ப்பக்கிரகத்துக்குள் செல்ல நான் முயன்றபோது, என்னுடன் வந்த உ.பி. மாநில அதிகாரி ஒருவர் அதை விரும்பவில்லை. இதைக் கவனித்து விட்ட தலைமை பூஜாரி லால்தாஸ், தனது கரங்களை நீட்டி என்னை வரவேற்றார். எனது கரங்களைப் பிடித்தபடியே தனது அலுவலகத்துக்கு அழைத்துச் சென்றார்.

சிறந்த மனிதனுக்கான ஒளிவிடும் உதாரணமாகக் காட்சி

"

**அவர்கள் என்னைத் தொலைத்துக்கட்டப் பார்க்கிறார்கள். ராமஜென்மபூமி திறக்கப்பட்டதும் எல்.கே. அத்வானி, ராஜமாதா சிந்தியா மற்றும் ஆர்.எஸ்.எஸ்., விஸ்வ ஹிந்து பரிஷத், முக்தி மோர்ச்சா தலைவர்கள் இங்கு வந்தார்கள். தாங்கள் தான் ராமஜென்மபூமியை மீட்டதாகத் தங்கள் தொண்டர்களிடம் காட்டிக் கொள்வதற்காக 'வீடியோ' படம் எடுப்பவர்களையும் கூடவே அழைத்து வந்திருந்தார்கள். அவர்கள் விசேஷ பூஜை நடத்த முயன்றபோது நான் அனுமதிக்கவில்லை.**

"

தந்த லால்தாஸ், ஒரு கம்யூனிஸ்ட்டாக இருப்பாரோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. இதை அவரிடமே கேட்டுவிட்டேன்.

கேள்வி : நீங்கள் ஒரு கம்யூனிஸ்டா?

பதில் : ஆம். நான் மார்க்சியத்தை நம்புகிறவன். வேத நூல்களைப் படித்ததைப் போல் மார்க்சியத்தையும் படித்திருக்கிறேன்.

கேள்வி : கம்யூனிஸ்ட் கட்சியில் எப்போதாவது உறுப்பினராக இருந்திருக்கிறீர்களா?

பதில் : இருந்திருக்கிறேன். நான் சிறு வயதிலேயே அதாவது, 1969-ம் ஆண்டு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தேன். 10 ஆண்டுகள் தீவிரமாகச் செயல்பட்டேன். 1979-ம் ஆண்டு விலகி விட்டேன்.

கேள்வி : கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தது ஏன்?

பதில் : கார்ல் மார்க்ஸின் எழுத்துக்களும் கருத்துகளும் என்னை மிகவும் ஈர்த்தன. மார்க்சியம் மீது எனக்கு இன்னும் நம்பிக்கை இருக்கிறது. மார்க்ஸ் ஓர் உன்னதமான ஆசான்; மனிதாபிமானி. மனிதகுலத்தின் மீட்பர். நான் அண்டை மாவட்டமான பஸ்தியில், ஓர் எளிய குடும்பத்தில் பிறந்தவன். வறுமையின் பிடியிலிருந்து நாட்டை மீட்பதற்கு, மார்க்சிய கோட்பாடுகளை அமல்படுத்துவதே ஒரே வழி என்பதில் எனக்கு இன்னும் அசைக்கமுடியாத நம்பிக்கை இருக்கிறது. வறுமைதான் இந்தியாவின் முதல் எதிரி. இதை மார்க்சிய வாள் மூலமே வீழ்த்த முடியும்.

கேள்வி : அப்படியானால் நீங்கள் சந்நியாசி ஆனதும் இப்போது பூசாரியாக இருப்பதும் ஏன்?

www.tamilarangam.net



"

எனது சம்பளம் எவ்வளவு தெரியுமா? மாதம் 30 ரூபாய். கீர்த்தனைக்காரர்கள் எவ்வளவு பெறுகிறார்கள் தெரியுமா? மணிக்கு ஒரு ரூபாய். இந்த அற்பத்தொகைகூட கடந்த 6 மாதங்களாக எங்களுக்கு கிடைக்கவில்லை!

எங்களுக்கு எதுவும் தரவேண்டாம் என்று அதிகாரிகளை (ரிசீவர்ஸ்) விஸ்வ ஹிந்து பரிஷத் நிர்ப்பந்தம் செய்துவிட்டது.

"

**பதில் :** ஆன்மீகத்தில் எனக்கு உள்அமைதி கிடைக்கிறது. நான் ஒரு வேதாந்தி. வேதாந்தம் மார்க்சியத்துக்கு மிகவும் நெருக்கமானது. ஆனால் நான், அரசியலில் செல்வாக்குப் பெறுவதற்காக மதத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் கள்ள ஞானிகள், மதவெறியர்கள், பழைமைவாதிகள் போன்றவனல்ல. ராமனை நான் வழிபடுகிறேன். ஆனால் அவர்கள் ராமன் பெயரில் வியாபாரம் நடத்தப் பார்க்கிறார்கள். நான் ஆன்மீகவாதி. அவர்கள் வியாபாரிகள். ராமஜென்ம பூமிப் பிரச்சினையை அரசியலாக்குவதன் மூலம், ஹிந்து, மூஸ்லீம் இடையே பூசலை உருவாக்கி நாட்டை அவர்கள் பிளவுபடுத்தப் பார்க்கிறார்கள். மனிதர்களில் நான் எந்த வித்தியாசமும் காண்பதில்லை. ஹிந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் யார் வேண்டுமானாலும் இங்கு வரலாம். ஆனால் மதவெறியர்கள் ராமனை தங்களின் ஏகபோக உரிமையாக்கிக் கொள்ளப் பார்க்கிறார்கள். இதை நான் அனுமதிக்கப் போவதில்லை; என் பிணம் மீது தான் அது நடக்கும்.

**கேள்வி :** அவர்கள் யார்?

**பதில் :** விஸ்வ ஹிந்து பரிஷத், ஆர்.எஸ்.எஸ் ஆகியவற்றைச் சேர்ந்த மதவெறியர்கள் ராமர் பாரதத்துக்குச் சொந்தமானவரே தவிர, குறுகிய நோக்கம் கொண்ட எந்தவித வெறிக் கும்பலுக்கும் சொந்தமானவரல்ல. அவர் மாபெரும் ஆட்சியாளர்; மனிதாபிமானி; சிறந்த பாரம்பரியத்தை உருவாக்கியவர். எனவேதான் நமது மக்கள் ராமராஜ்யம் பற்றிக் கனவு காண்கிறார்களே தவிர, ஸ்வயம் சேவக் (ஆர்எஸ் எஸ்) ராஜ்யத்தை அல்ல.

**கேள்வி :** உங்களை வெளியேற்ற அவர்கள் முயற்சிக்கிறார்களா?

**பதில் :** ஆம், நிச்சயமாக! அவர்கள் என்னைத் தொலைத்துக்கட்டப்பார்க்கிறார்கள். ராமஜென்மபூமி திறக்கப்பட்டதும் எல்.கே. அத்வானி, ராஜமாதா சிந்தியா மற்றும் ஆர்.எஸ்.எஸ்., விஸ்வ ஹிந்து பரிஷத், முக்தி மோர்ச்சா தலைவர்கள் இங்கு வந்தார்கள். தாங்கள்தான் ராமஜென்ம பூமியை மீட்டதாகத் தங்கள் தொண்டர்களிடம் காட்டிக் கொள்வதற்காக 'வீடியோ' படம் எடுப்பவர்களையும் கூடவே அழைத்து வந்திருந்தார்கள். அவர்கள் விசேஷ பூஜை நடத்த முயன்றபோது, நான் அனுமதிக்கவில்லை; நான்தான் தலைமைப் பூஜாரி. பூஜையை நான்தான் நடத்த முடியும்: ராமஜென்மபூமி பிரச்சினையை நீங்கள் அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்தப் பார்க்கிறீர்கள். நீங்கள், அரசியல் வியாபாரிகள்; ஆன்மீகவாதிகள் அல்ல. தரிசனம் செய்துவிட்டுப் போய் விடுங்கள் என்று நான் கூறினேன்.

**கேள்வி :** அவர்கள் என்ன செய்தார்கள்?

**பதில் :** என் மீது அவதூறு கற்பிக்க ஆரம்பித்தார்கள், என்னை நீக்கும்படிக் கோரினார்கள். எனக்கு எதிராக அறிக்கைகள் விட்டு, என் மீது நடவடிக்கை எடுக்கும்படி மாவட்ட நிர்வாகத்தை நிர்ப்பந்திக்க ஆரம்பித்தனர்.

**கேள்வி :** நீங்கள் எப்படி ஜீவனம் நடத்துகிறீர்கள்? ஏதாவது நிதி உதவி கிடைக்கிறதா?

**பதில் :** அதைப்பற்றிச் சொல்லவே வெட்கப்படுகிறேன்: எனது சம்பளம் எவ்வளவு தெரியுமா? மாதம் 30 ரூபாய். கீர்த்தனைக்காரர்கள் எவ்வளவு பெறுகிறார்கள் தெரியுமா? மணிக்கு ஒரு ரூபாய். இந்த அற்பத் தொகை கூட கடந்த 6 மாதங்களாக எங்களுக்குக் கிடைக்கவில்லை!

எங்களுக்கு எதுவும் தரவேண்டாம் என்று அதிகாரிகளை (ரிசீவர்ஸ்) விஸ்வ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஹிந்து பரிஷத் நிர்ப்பந்தம் செய்துவிட்டது. ஊதியம் அளிப்பதற்கான காசோலையில் ஒரு 'ரிசீவர்' கையெழுத்துப் போட்ட போதிலும், ஆர். எஸ்.எஸ். ஆதரவாளரான இன்னொரு 'ரிசீவர்' கையெழுத்துப் பேடா மறுத்துவிட்டார். உ. பி. அரசாங்கம் எதுவும் செய்ய வில்லை.

கேள்வி : காணிக்கைகளை என்ன செய்கிறீர்கள்?

பதில் : அவை நாள்தோறும் 'ஸ்டேட்பாங்க்'கில் டெபாசிட் செய்யப்படுகிறது. ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு இருக்கிறது. இந்த 'டெபாசிட்'களிலிருந்துதான் எங்களுக்கு ஊதியம் அளிக்கப்பட வேண்டும் என்பது ஏற்பாடு. ஆனால் 'டெபாசிட்'டுகள் 'ரிசீவர்'களின் கட்டுப்பாட்டில் உள்ளன. தட்சிணையாக கிடைக்கும் காசில்தான் நாங்கள் காலம்கடத்திவருகிறோம். எங்கள் நிலைமையைப் பார்த்துக் கொள்ளுங்கள். (ஊதியம் வழங்கப்படாததற்கு விஸ்வ ஹிந்து பரிஷத்துதான் முக்கிய காரணம் என்பதை அப்போது அங்கிருந்த மாவட்ட அதிகாரி ஒருவர் ஒப்புக் கொண்டார்)

கேள்வி : பாபர் மசூதி-ராம ஜென்மபூமி பிரச்சினைக்கு எப்படித் தீர்வுகாண முடியும் என்று நினைக்கிறீர்கள்?

பதில் : என்னைக் கேட்டால், இதற்குத் தீர்வுகாண்பது பெரிய விஷயமே இல்லை. முதலில், வெளியில் விளம்பரம்செய்யப்படுவதுபோல் இது ஒரு பெரிய பிரச்சினையேயில்லை. அயோத்தி மக்களிடம் இப்பிரச்சினையை விட்டு விட்டால் ஒரு சுமுகத் தீர்வு கண்டு விடமுடியும். அயோத்தியிலுள்ள நாங்கள், ஹிந்துக்களும் முஸ்லீம்களும் கூடிப்பேசி ஒரு தீர்வு கண்டு விடுவோம். பாபர் ஹிந்து பரிஷத், விஸ்வ மசூதி நடவடிக்கைக்குழு உறுப்பினர்கள் இந்த விவகாரத்தில் தங்கள் 'மதவெறி மூக்கை' நுழைக்கக் கூடாது.

கேள்வி : எந்தத் தகராறும் ஏற்படாது என்று நீங்கள் நிச்சயமாக நம்புகிறீர்களா?

பதில் : கலவரம் ஏதாவது ஏற்பட்டால் நான் அயோத்தியை விட்டே சென்றுவிடத்தயார். நாங்கள் — ஹிந்துக்களும் முஸ்லீம்களும் — உடன் பிறந்தவர்களைப் போல் இங்கு வாழ்கிறோம். ஒருவரையொருவர் சார்ந்து இருக்கிறோம்; ஒற்றுமையாக ஜீவிக்கிறோம். 'பாதுகாப்பற்ற உணர்வு இருக்கிறதா?' என்று எங்கள் முஸ்லீம் சகோதரர்களைப் போய்க் கேளுங்கள். இந்தப் பிரச்சினை லக்னோவிலுள்ள தலைவர்கள் உருவாக்கியது. அவர்கள் இங்கு வந்து, காலங்காலமாய் எங்களிடையே இருந்துவரும் நல்லுறவை கெடுக்கப் பார்க்கிறார்கள். அவர்கள் சாலைகள் அமைப்பது, மருத்துவமனை கட்டுவது பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவது போன்றவற்றில் ஈடுபட்டால் நன்றாக இருக்கும். முதலில் வறுமையை ஒழிப்பதில் அவர்கள் அக்கறை காட்டட்டும்; இங்கு வந்து குழப்ப வேண்டாம்.

கேள்வி : ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இங்கு சமூக உறவுகள் உள்ளனவா?

பதில் : சமூக உறவுகள் மட்டுமா! எங்களின் கமிவும் புனிதமான ஆலயங்களில் ஒன்றான சௌபுஜி மந்திர் ஒரு முஸ்லீமினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. எங்களின் மிகப் பெரிய வழிபாட்டுத்தலமான கனக்பவனில் ஷெனாய் இசைப்பவர்கள் தலைமுறை தலைமுறையாக முஸ்லீம்களே. மிகுந்த பக்தியுணர்வுடன் அவர்கள் ஷெனாய் இசைக்கிறார்கள். பிரார்த்தனைகளின் போது அவர்கள் 'நமாஸ்' சொல்லத் தவறுவதில்லை. இங்கு நடக்கும் மிகவும் பிரபலமான முஸ்லீம் பண்டிகையில் அயோத்தியிலுள்ள ஹிந்துக்கள் அனைவருமே பங்கேற்பது உங்களுக்குத் தெரியுமா!

லால்தாஸ் மிகுந்த ஆன்ம நேயம் கொண்ட மனிதராகக் காணப்படுகிறார். சாதாரண காவிவேஷ்டி, ஜிப்பாவுடன் எளிமையாகத் தோற்றமளிக்கும் அவர், அடக்கம், அர்ப்பண உணர்வு, பக்தியின் உருவமாகக் காட்சி தருகிறார். அவருக்கு 35 வயது இருக்கலாம். ஆனால் மிகவும் இளமையாகக் காணப்படுகிறார்.

மார்க்சியத்தை நம்பும் அவர், 'அரசுக்கு மதம் எதுவும் கூடாது. மதம் மக்களுக்குச் சொந்தமானது. தாங்கள் விரும்பும் மதத்தைக் கடைப்பிடிக்க மக்களுக்கு முழுச் சுதந்திரம் இருக்க வேண்டும். அதேபோன்று, மதம் மீது நம்பிக்கையில்லாதவர்கள், தாங்கள் விரும்புகிறபடி வாழ்க்கையை நடத்தவும் சுதந்திரம் இருக்க வேண்டும் என்கிறார். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## என் சிறகுகள் வான் வெளியில் . . .

ஹெச். ஜி. ரசூல்

வீட்டுச் சிறைக்குள்ளே
விலங்கிட்டு — என்
ஞானத்திறமையை
நசுக்கப் பார்த்தீர்கள்
வாசல் முற்றத்தில்
வந்து பாருங்கள்
விதவிதமாய் கோலங்கள்!

□

சம்சாரப் பாவையென்று
சமையலறையில்
எனக்கு
சங்கிலி போட்டீர்கள்
சாப்பாட்டு இலையை
சப்தமின்றி பாருங்கள்
விதவிதமாய் விருந்துகள்!

□

பிள்ளைபெறும் எந்திரமென்று
பிரியமின்றி பேசி...
பிடரியில் அறைந்தீர்கள்
பூச்சூடி
பொட்டிட்டு போகும் — என்
பிள்ளைகளைப் பாருங்கள்
விதவிதமாய் அழகுகள்!

□

பஞ்சுப் பூக்களென்று
மென்மைக்கு மட்டும்
இலக்கணம் சொல்லி...
இதமாய் வர்ணித்தீர்கள்.
வயல்வெளிகளில்
பஞ்சாலைகளில்...
வந்து பாருங்கள்
விதவிதமாய் — என்
உழைப்பிலும் விளைந்த
உற்பத்தி செல்வங்கள்!

□

என்படைப்புத்திறன்
பஞ்சம் இல்லாதது
என் ஞானத்திறன்
நசுக்க முடியாதது.
கூண்டுகளை கிழித்த
என் சிறகுகள்
வான்வெளியில்.
புதைத்தாலும்
புல்லின் இதழாய்...
புதுத் தளிராய்...
பூப் பூப்பேன்.
என் ஞானத்திறனை
எவனாலும்
அழிக்க முடியாது.
ஏன் தெரியுமா...
ஏன் தெரியுமா...
நான் மனுஷி.

□ □ □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கூவம்: சென்னை நகரத்தின் சாபக்கேடு

உலகில் தோன்றிய நாகரி கங்களெல்லாம் நதிகளின் கரை களில்தான் தோன்றியுள்ளன. அதன் பிறகு காலப்போக்கில் உருவான பெரிய நகரங்கள் எல்லாம் நதிக்கரைகளில்தான் தோன்றி விரிவடைந்து நிலை பெற்றுள்ளன. வெள்ளையர் கள் வந்த பிறகு பெரிய நகர மாக விரிவடைந்த 'சென்னப் பட்டணம்' இதற்கு விதி விலக்கு. தமிழகத்தின் இயல் பான பரிணாம வளர்ச்சியின் ஓர் அங்கமாக சென்னை நகரம் தோன்றியிருந்தால் நதிக்கரை ஒன்றில் உருவாகி யிருக்கக்கூடும். சென்னை நகரம் வெள்ளையர் உரு வாக்கி வளர்த்தது அல்லவா?! அதனால்தான் இந்த வித்தி யாசம் போலும். காவிரி, வைகை, மணிமுத்தாறு போன்ற ஆறுகள் அழகுதரும் வாய்ப்பு சென்னை நகருக்கு கிட்டாவிட்டாலும் குருடனுக்கு ஏற்ற பெண்டாட்டி என்ற வகையில் இங்கும் சில ஆறுகள் இருக்கத்தான் செய்கின்றன.

சென்னை நகரில் வலம் வரும் அடையாறு, கூவம், பக்கிங்ஹாம் கால்வாய் ஒட் டேரி கால்வாய் முதலிய வற்றை நாம் ஆறுகளாக நினைத்துக் கொள்ளலாம்.

கங்கையும், பிரம்மபுத்திரா வும் இமயமலையில் தோன்று கின்றன. ஆனால், அடையாறு செம்பரம்பாக்கம் ஏரியின் மதகுகளிலிருந்து உற்பத்தியா கிறது. செம்பரம்பாக்கம் ஏரி யில் தண்ணீர் நிரம்பி உபரி நீர் பொங்கி வழிந்தால் அடை யாறில் தண்ணீர் ஓடும்.

### ஜன்மஸ்தலம்

கூவத்தின் கதியும் இது தான். கோயம்பேடு சாக்கடை சுத்திகரிப்பு நிலையம்தான் அதன் தற்போதைய உற்பத்தி ஸ்தலம். அடுத்தது பக்கிங் ஹாம் கால்வாய். இது ஆந்திர மாநிலத்திலிருந்து புதுச்சேரி வரை செல்கிறது. பாரதியாரும், பாரதிதாசனும் புதுச்சேரியில் இருந்த காலத் தில், புதுச்சேரியிலிருந்து சென்னை நகருக்கு பக்கிங் ஹாம் கால்வாய் வழியே படகுப்போக்குவரத்து நடை பெற்றுள்ளது. இந்த பக்கிங் ஹாம் கால்வாய் பல இடங் களில் கடல் ஏற்ற நீர்க்குட்டை களை இணைக்கிறது. ஒரு காலத்தில் உப்பு, விறகு, வைக்கோல், கால்நடைகள் முதலியன இந்தக் கால்வாயில் படகுகள் மூலமாக பயணம்



*ஒரு லிட்டர் கூவம் தண்ணீரில் 900 மில்லி கிராம் இரும்பும், 275 மில்லி கிராம் ஈயமும், 1313 மில்லி கிராம் நிக்கலும், 32 மில்லி கிராம் துத்தநாக மும் கலந்துள்ளன. இவற்றைத் தவிர, பல்வேறு உப்புக்களும் கலந்திருக்கின்றன. சல்பேட் உப்புக் கல் மட்டும், ஒரு லிட்டருக்கு 80 முதல் 408 மில்லி கிராம் வரை உள்ளது. இது, இந்தியாவில் உள்ள எந்த நதியிலும் கிடையாது.*

www.tamilarangam.net



செய்தன். இன்று அதனை நினைத்துப்பார்க்கமுடியுமா?

அடையாறுக்குப் பக்கிங் ஹாம் கால்வாய்க்கும் எப் பொழுதாவது தண்ணீர் வரு வதற்கு ஒரு நிலையான வாய்ப்பு உள்ளது. ஆனால், ஒட்டேரி கால்வாய்க்கு அதுவு மில்லை. சாக்கடை குழாய் களும், பி அண்ட் சி மில்லின் கழிவு நீரும்தான் அதன் உற் பத்தி ஸ்தானம்.

அடையாறு, கூவம், பக்கிங் ஹாம் கால்வாய், ஒட்டேரி கால்வாய் - இவற்றின் பழைய காலத்தை நினைத்து இன்று அங்கலாய்த்துக் கொள்ளலாம். பச்சையப்பன் கல்லூரியின் ஸ்தாபகரான பச்சையப்ப முதலியார், அதிகாலையில் ஸ்நானாதிகளை கூவத்தில் தான் முடித்துக்கொள்வாராம். இன்று, கூவம் சென்னை நகரத்தின் சாபக்கேடாக உள்ளது.

கூவம் உற்பத்தியாவது கோயம்பேடு சாக்கடை சுத்தி கரிப்பு நிலையத்திலிருந்து தான் என்று பார்த்தோம். ஜீவ நதிகளுடன், சிற்றாறுகள் வந்து கலப்பது போல, அதன் பாதை எங்கும் வீடுகளின் சாக்கடைகளும் சிறிய, பெரிய தொழிற்சாலைகளின் கழிவு களும் வந்து கலக்கின்றன. மலையில் பிறந்த நதி சங்க மிப்பது கடலில்தான் என்று கூறுவது கூவத்துக்கு மட்டும் பொருந்தாது. ஒரு காலத்தில் கூவமும் கடலில்தான் கலந்து கொண்டிருந்தது. இப்பொழுது, கடலலைகள் கொண்டு வந்து குவிக்கும் மணல் காரணமாக சங்கம இடத்தில் அணை போட்டாற்போல மேடுகள் தோன்றியுள்ளன. அதனால், நதி வடிவில் இருக்கின்ற சாக் கடைக்குட்டையாக கூவம் மாறிவிட்டது.

*"இதன் காரணமாக கூவத்தில் மலக்கழிவுகள் தவிர்க்க இயலாதபடி சேருகின்றன. 1986-ம் ஆண்டு கூவத்திலிருந்து பரவும் நோய்கள் என்னென்ன என்று ஓர் ஆய்வு நடத்தினர். அதில் கிடைத்த தகவல்கள் அதிர்ச்சி தருவ தாக உள்ளன. காலரா, மஞ்சள்காமாலை, வயிற்றுப்போக்கு, சீதபேதி ஆகிய நோய் களுக்கு அடிப்படையான கிருமிகள் கூவம் நீரில் எங்கும் நீக்கமற நிறைந்து பரவி யுள்ளன."*

### கனிமவளம்

ஒரு லிட்டர் கூவம் தண்ணீ ரில் 900 மில்லி கிராம் இருப் பும், 275 மில்லி கிராம் ஈயமும், 1313 மில்லி கிராம் நிக்கலும், 32 மில்லி கிராம் துத்தநாகமும் கலந்துள்ளன. இவற்றைத் தவிர, பல்வேறு உப்புக்களும் கலந்திருக்கின்றன. சல்பேட் உப்புக்கல் மட்டும், ஒரு லிட்டருக்கு 80 முதல் 408 மில்லி கிராம் வரை உள்ளது. இது, இந்தியாவில் உள்ள எந்த நதியிலும் கிடையாது.

சேலத்தில் இரும்பு ஆலை அமைப்பதற்கு பதிலாக கூவத் தின் கரையில் சிறிய இரும்பு உற்பத்தி ஆலைகளை தமிழக அரசு அமைத்தால் லாபகரமாக நடக்கும் என்று தோன்று கிறது.

### உயிரினங்களே கிடையாது!

சாதாரணமாக தண்ணீரில் ஆக்ஸிஜன் என்று அழைக்கப் படும் பிராண வாயு கரைந் திருக்கும். இவ்வாறு கரைந் துள்ள பிராண வாயுவை சுவாசித்துதான் மீன், நத்தை, நண்டுகள் முதலியன உயிர் வாழ்கின்றன. ஆனால், கூவம் இதிலும் புதிய சாதனை படைத்துள்ளது. கூவம் தண் ணீரில், கரைந்த நிலையில் பிராண வாயுவே இல்லை. அதனால் மீன், நத்தை, நண்டு கள் போன்ற உயிரினங்கள் வாழமுடியாது. அவைகளும் இல்லை. நீர்த்தாவரங்களும் கூவத்தில் வளர்வதில்லை.

### திறந்தவெளிக் கழிப்பிடமாய்...

கூவத்தின் இரு கரைகளிலும் ஏராளமான குடிசை வீடுகள் உள்ளன. இவற்றில் வசிக்கும் சாமான்யர்கள் கூவத்தை அற் புதமாக பயன்படுத்துகிறார் கள்! அவர்களின் திறந்த வெளிக்கழிப்பிடங்கள் கூவத் தின் இரு கரைகள்தான். கட் டணக் கழிப்பிடங்கள் வந்த பிறகு காசில்லாதவர்கள் என்ன செய்வார்கள்?

இதன் காரணமாக கூவத் தில் மலக்கழிவுகள் தவிர்க்க இயலாதபடி சேருகின்றன: 1986 ஆம் ஆண்டு, கூவத்தி திருந்து பரவும் நோய்கள் என்னென்ன என்று ஓர் ஆய்வு நடத்தினர். அதில் கிடைத்த தகவல்கள் அதிர்ச்சி தருவதாக உள்ளன. காலரா, மஞ்சள் காமாலை, வயிற்றுப்போக்கு, சீதபேதி ஆகிய நோய்களுக்கு அடிப்படையான கிருமிகள் கூவம் நீரில் எங்கும் நீக்கமற நிறைந்து பரவியுள்ளன.

### உயிர்க்கொல்லி

கூவம் நீரில் யானைக்கால் வியாதியையும், மலேரியா காய்ச்சலையும் பரப்பும் கொசுக் கள் படை படையாக வசிக் கின்றன. இவற்றின் லார்வாக் களும் கூவம் நீரில் பெருகி பரவுகின்றன. சில ரசாயன பொருள்கள், மனித உடலில் புற்று நோயை உருவாக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**"சென்னை நகர மக்களின் காலைக் காப்பிக்கும் டீக்கும் உதவும் எருமை மாடுகள், பல சந்தர்ப்பங்களில் கூவம் நீரில் இளைப்பாறுவதைக் காணலாம். கூவம் நீரிலுள்ள அத்தனை கிருமிகளும் எருமை மாடுகளின் மடிக்காம்பு களில் மட்டும் குடியேறாதா என்ன? மிரட்டுவதாக நினைக்க வேண்டாம்! சலவைக்குப் போய்விட்டு வந்த சட்டையை எடுத்துப் போட்டுக்கொள்ளும் முன், ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்! உங்கள் சட்டை கூவம் நீரில் துவைக்கப்பட்டிருக்கலாம்!"**

வதாக கண்டுபிடித்திருக்கிறார்கள். அத்தகைய ரசாயன பொருள்களில் ஒன்று 'டிரை ஹாலோ மீதேன். இது கூட்டுப்பொருள் வடிவத்தில் கூவம் நீரில் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தக் கூட்டுப் பொருள் புற்று நோய் உற்பத்திக்கு அடிப்படை காரணமாக அமைந்து அந்த புண்ணியத்தையும் கூவத்துக்கு கொண்டு போய்ச் சேர்க்கிறது.

சென்னை நகர மக்களின் காலைக் காப்பிக்கும் டீக்கும் உதவும் எருமை மாடுகள், பல சந்தர்ப்பங்களில் கூவம் நீரில் இளைப்பாறுவதைக் காணலாம். கூவம் நீரிலுள்ள அத்தனை கிருமிகளும் எருமை மாடுகளின் மடிக் காம்புகளில் மட்டும் குடியேறாதா என்ன? மிரட்டுவதாக நினைக்க வேண்டாம்! சலவைக்கு போய்விட்டு வந்த சட்டையை எடுத்து போட்டுக்கொள்ளும் முன், ஒரு கணம் நினைத்துப்பாருங்கள்! உங்கள் சட்டை கூவம் நீரில் துவைக்கப்பட்டிருக்கலாம்!

சென்னை நகரிலுள்ள பல மார்க்கெட்டுகளில் விற்பனையாகும் கீரை வகைகள் முள்ளங்கி, மரவள்ளிக்கிழங்கு (ஆலவள்ளி). இவற்றின் வேர்களில் படிந்துள்ள மண்ணை, கூடை தூக்கி விற்கும் நமது தாய்மார்கள் அலசுவது கூவம் நதியில்தான்!

இப்பொழுது சொல்லுங்கள். கூவம், சென்னையின் சாபக் கேடா, இல்லையா?

## *கானல்நீரான திட்டங்கள் . . .*

இந்த நிலையை மாற்ற இதுவரை பலர் வாய்கிழிய பேசியிருக்கிறார்கள். தி.மு.க., முன்பு ஆட்சியில் இருந்த பொழுது, பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. கூவம் நதி கடலில் சேருமிடத்தில் மணல் மேடுகள் குழிவதைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த நடவடிக்கைகளினால் கிடைத்த பலன் திராவிட நாடு போல, லட்சியக்கனவாகவே இருந்து விட்டது. எண்ணூர் அனல் மின் நிலையத்தில் பயன்படுத்தப்படும் கடல்நீரை கூவம் நதியில் சேர்த்துவிட்டால் தண்ணீர் தொடர்ச்சியாக ஓடும். அதனால், கூவம் சுத்தமாக இருக்கும் என்று ஒரு திட்டம் முன் வைக்கப்பட்டது. இதற்கு காசு இல்லை என்று சென்னை மாநகராட்சியும், தமிழக அரசும் கைவிரித்துவிட்டன.

கூவத்தை சீர்மைக்க திட்டங்களை வகுப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து நிபுணர்கள் வந்தார்கள். அவர்களும் ஒரு திட்டத்தை தயாரித்தார்கள். அந்தத்திட்டத்தின் கதி என்னவென்றே தெரியவில்லை! சென்ற ஆண்டில், மத்திய அரசின் முயற்சியின் பேரில் இங்கிலாந்திலிருந்து 12 உறுப்பினர் கொண்ட குழு ஒன்று வந்தது. அவர்கள் கூவம் பிரச்சினையை அலசி ஆராய்ந்தார்கள். கூவத்தை சீரமைப்பதற்கான பணிகளை நிறைவேற்றுவது என்றால் அதற்கு தமிழக அரசின் 8 இலாகாக்களை ஒருங்கிணைந்து செயல்படவைக்க வேண்டும் என்று கண்டுபிடித்தார்கள். அதனால் கூவம் விஷயத்தில் மட்டும் இந்த 8 இலாகாக்களின் அதிகாரம் உடைய ஒரு உயர்மட்டக் குழுவை அமைக்கவேண்டும். என்று ஒரு நிர்வாகத்திட்டமும் தயாரித்துக் கொடுத்தார்கள். ஒரேபடியாக, கூவத்தை மணக்கச் செய்கிறேன் என்று வீராவேசத்தோடு சிளம்பி, பிறகு காசில்லை என்று சோம்பிக் கிடக்க வேண்டியதில்லை. பல்வேறு கட்டங்களில் ஒதுக்கக் கூடிய நிதியின் அளவுக்கேற்ப திட்டங்களை வகுக்கலாம் என்று யதார்த்தமான ஒரு யோசனையையும் முன்வைத்து விட்டு அவர்கள் தேம்ஸ் நதிக் கரைக்கு திரும்பி விட்டார்கள்.

## *சித்திரை வரட்டும் . . .*

தமிழகத்தில் ஆட்சி மாறி விட்டது. கூவத்துக்கு கரையமைத்த கருணாநிதி மீண்டும் முதல்வராயிருக்கிறார். கூவத்தின் இருபுறமும் பல படகுத் துறைகளை அமைத்த தி.மு. கழகம் ஆட்சிக்கட்டிலில் ஏறியிருக்கிறது. நம்மூக்கைத் துளைக்கும் கூவத்தின் நாற்றம் கோட்டை வரை பரவவில்லை போலும். சுள்ளென்று வெயிலடிக்கிற சித்திரைமாதம் வரட்டும். என்ன நடக்கிறது என்று பார்ப்போம்!

அருண்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தந்தி : 'நிஜாம்' தொலைபேசி : 2263 & 2186

தரத்தில் உயர்ந்தது ! சுவைக்கச் சிறந்தது ! !

# நிஜாம் லேடி

ஸ்பெஷல் / பன்னீர்

## புகையிலை

)|(

தயாரிப்பாளர்கள் :

ஹாஜி A. M. அப்துல் ரஹிமான் ராவுத்தர் & கோ

நிஜாம் புகையிலை தொழிற்சாலை,

புதுக்கோட்டை - 622 001


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடக்கம் என்கிற சொல் பெண்களோடு சம்பந்தம் உடையதாக தமிழில் பயிலப்பட்டு வந்தது. பெண்களின் உடைமை அது! வளையலைப் போலவும் மூக்குத்தியைப் போலவும்! சிலப்பதிகாரக் கண்ணகி அடக்கமே உருவானவள். அப்படி இருப்பதையே தன் வாழ்வின் பெரும் பேராகக் கருதியவள். கணவன் ஊசி எனில் அவனைத் தொடர்ந்து இயங்கும் நூலைப் போல தன்னைப் பாவித்தவள். அதன் காரணத்தாலேயே கணவனை மாதவிக்குத் தாரை வார்த்தவள்.

அடக்கத்தை, பெண்ணின் அருங்குணம் என்று கருதிய சமூகத்தின் அறிவாளர்களும், பெண்ணை வீட்டுக்குள், நான்கு சுவர்களுக்குள் அடங்கி வாழும் ஜீவனாகவே கருதினர். கல்வி, அலுவல் காரணமாகப் பிரியும் பிரிவு பெண்களுக்கு இல்லை என்று தொல்காப்பியம் பேசுகிறது.

பெண்களுக்கு கல்வி அறிவு மறுக்கப்பட்டது. உலக நிகழ்ச்சிகளைப் பற்றிய அறிவும் மறுக்கப்பட்டது. 'வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்' என்று கூறுவது ஒரு பாராட்டாக இருக்கும் எனில் பெண்களின் வெளியுலக உறவு அடைந்திருந்த ஷீணத்தை நாம் கண்டு கொள்ளலாம். பூம்புகாரை கடக்காத முன்னரே 'மதுரை வந்து விட்டதா' என்று கேட்ட கண்ணகியின் அறியாமை, சிறப்புக்கு உரியதுதானா?

### தங்கக்கூண்டு?

பெண்களை அறியாமை என்ற இருட்டில் ஆழ்த்தி வைத்திருப்பதில் ஆண்கள் சுகம் கொண்ட காலம் இருந்தது. ஆண்களின் பரத்தையர் ஒழுக்கத்தையும் இன்னபிற பண்பாட்டுச் சீரழிவுகளையும், பெண்கள் அறிந்து விடக் கூடாதே என்பதில், ஆண்களுக்கு அதிக அக்கறை இருப்பது நியாயம்தானே? பெண்கள் சிக்குண்ட கௌரவச் சிறையைச் சமூகம் அழகிய சொற்களால், கண்ணியமான பெயர்களால் மங்கல வழக்காக இல்லம் என்று, அழைத்தது. ஆகவே அவள் இல்லாள்: வீட்டின் தலைவி. நிலாவைப் பிடித்துத் தருகிறேன் என்று சொல்லி கைப்பிள்ளைக்கு அமுது ஊட்டும் செயல் போலவே இப்பெயர்கள் பெண்களை ஏய்ப்பதற்கென்றே பயன்படுத்தப்பட்டன. இவற்றையறியாத பெண்களோ தங்களுக்கு சூட்டப்பட்ட முள் கிரீடத்தை வைரக் கிரீடம் என்றே எண்ணிக் கொண்டனர். தங்கள் கூண்டுகள் தங்கத்தால் ஆனவை என்று தலைகனத்துப் போனார்கள்.

*திலகவதி*

# பெண் விடுதலை:

## இன்னமும் கொளுத்த வேண்டிய மடமைகள் எத்தனையோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"

**பெண்கள் கேள்வி கேட்கத் துவங்கினார்கள். ''எங்கள் கண்களை மட்டும் நீங்கள் கட்டிப் போடுவதன் காரணம் யாது?'' என்றார்கள். ''உங்கள் கரங்கள் உருவாக்கும் கரங்கள் என்றால் எங்கள் கரங்கள் வெறும் தோள்முனைத் தொங்கல் களா?'' என்று கேட்டார்கள். ''உங்களுக்கு வீட்டு வாயிலில் இருந்து உலகம் விரிகிறது. எங்களுக்கு மட்டும் கதவைத் திறந்ததும் வாசல்படியில் தரை காணாமல் போய் வங்காளக் கடல் வந்து விடுகிறதே! அது எப்படி...?''**

"

கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக இவ்வகை அறியாமையிலும், மகிழ்ச்சியிலும் நெடுந்துயிலில் ஆழ்ந்திருந்த பெண்ணின் மூன்றாவது கண் ஆங்கிலேயர் வருகையினால் திறந்தது. அவர்களின் அறை ஜன்னல்களை வெளியுலகக் காற்று மோதித் திறந்தது. புதிய வெளிச்சம் மின்னலாய் வெட்டி அவர்கள் அறைக்குள் புகுந்தது. புதிய ஆரோக்கியமான காற்றை அவர்கள் சுவாசிக்க வழி பிறந்தது. கல்வி, அது எத்தகையதாக இருந்தாலும் கற்றவரைப் பற்றிக் கொள்ளும்தானே? சிந்தனைச் சுடராக்கும்தானே? அச்சுடரைப் பிரகாசமாக்கும்தானே? யோசிக்க வைக்கும்தானே? யோசிப்பதால் பல கேள்விகள் உருவாகும் தானே? கேள்விகள் உருவானால் அதற்கான பதிலைத் தேடி அலைவதும், ஒரு தொடர்ச்சி தானே?

## கதவைத் திறந்ததும் வங்கக் கடல்

இது தான் நிகழ்ந்தது!

பெண்கள் கேள்வி கேட்கத் துவங்கினார் கள். "எங்கள் கண்களை மட்டும் நீங்கள் கட்டிப் போடுவதன் காரணம் யாது?" என்றார் கள். "உங்கள் கரங்கள் உருவாக்கும் கரங் கள் என்றால் எங்கள் கரங்கள் வெறும் தோள் முனைத் தொங்கல்களா?" என்று கேட்டார்கள்.

> தமிழக அரசுத் துறையில் ஐ. பி. எஸ். அதிகாரியாக பணிபுரியும் திலகவதி, பெண்களுக்கெதிரான சமூகக் கொடுமைகளை எதிர்த்துக் குரல் கொடுத்து வருபவர். பல பத்திரிகைகளில இவரது கதைகளும், கட்டுரைகளும் வெளிவந்துள்ளன. இங்கே, பெண்விடுதலை தொடர்பான தனது கருத்துகளை புதிய இளைஞனுடன் பகிர்ந்து கொள்கிறார்.

''உங்களுக்கு வீட்டு வாயிலில் இருந்து ஒரு உலகம் விரிகிறது. எங்களுக்கு மட்டும் கதவைத் திறந்ததும் வாசல்படியில் தரை காணாமல் போய் வங்காளக் கடல் வந்து விடுகிறதே! அது எப்படி? பாதி ஆகாயத்தை நாங்கள் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறோமே, இந்த உலகத்துப் பொருட்களின் உருவாக்கத்தில் எங்களுக்கும் சம பங்கு உண்டு" என்று மாதர் குலம் சிந்திக்கவும், பேசவும், எழுதவும் தலைப் பட்டது. இதைத்தான் பெண் விடுதலை இயக்கம் என்றார்கள்.

மகாகவி பாரதி புதுமைப் பெண்ணின் வரவுக்கு பச்சைக் கொடி காட்டினான்; வரவேற்பு மடலை எழுதி வாசித்தான். நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையும், நிமிர்ந்த ஞானச் செருக்கும் கொண்டவளாக பெண்ணை உருவாக்கித் தந்தான். இருபதாம் நூற்றாணடின் இணையற்ற சிந்தனாவாதிகளும், பேரறிவாளர்களும் இந்தப் புதிய பெண்ணின் வருகையை வாழ்த்தி வரவேற்றார்கள். பெரியார் ஈ. வெ. ரா தன் வாழ்நாள் முழுவதும் பெண்களின் இந்தப் புதிய எழுச்சிக்கு கருத்து பலமும் பக்க பலமுமாக இருந்தே வந்தார். மகாத்மா காந்தி, பெண்களை இச்சிறையில் இருந்து சுதந்திரப் பேரியக்கம் என்கிற ராஜபாட்டைக்கு கொண்டு வந்து சிறப்புக்கு உரியவர் ஆகிறார். சாதி, மதம் கடந்த உண்மைக் காதலுக்குத் தன் ஆதரவைத் தந்த பாரதிதாசன் விதவை மணத்தையும் வழி மொழிந்தார். இந்த நூற்றாண்டின் சமூக சீர்திருத்தக்காரர்களால் சதி என்னும் காட்டுமிராண்டி வழக்கம் ஒழிந்தது. பால்ய மணம், வைதவ்யம் காத்தல் ஆகியவற்றுக்கான ஆதரவை சமூகம் ஒதுக்கி வைத்தது. விதவை விவாகமும், காதல் மணங்களும் கைநீட்டி வரவேற்கப்படலாயின. சமூகத்தின் முகம் கொஞ்சம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"

***பெண்கள் இன்னும் தங்கள் மனைவிகளாகவும், சகோதரிகளாகவும், தாயாகவும், மகளாகவும் மட்டும்தான் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் மனுஷிகளாக இயங்குவதை மறுக்கிறார்கள். பெண், கணவனைச் சார்ந்தும், மகனைச் சார்ந்தும்தான் இருக்கவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தப் படுகிறார்களே தவிர, அவர்களுக்கு தனிக்கூறைகள் இருக்க முடியாது என்றே இன்னும் எண்ணுகிறார்கள். இது, இல்லறத்தேரின் ஒரு பக்கத்தில் குதிரையையும் மறுபக்கத்தில் கழுதையையும் பூட்டியதுபோல கேலிக்கூத்தாக மாறிவிடுகிறது.***

"

கொஞ்சமாய் சமூக முக்கியத்துவம் பெறுவது என்பது ஏக காலத்தில் நடைபெற்றுவரும் சமகால சரித்திரம் என்பதை நாம் அறிவோம்.

நல்லது. பெண்கள் தங்கள் வாழ்க்கைப் பொறுப்பை தாங்களே ஏற்றுக் கொள்வதற்காக ஒரு உத்தியோகத்தை ஏற்கத் தலைப்பட்டார்கள். தொழிற்சாலைகளிலும் இன்னபிற இடங்களிலும் பெண்கள், ஆண்களுக்குச் சமமாக மிகக் கடுமையாக உழைத்தார்கள். உழைப்புக்கேற்ற ஊதியம் இன்னமும் பல இடங்களில் பெண்களுக்கு முழுமையாக அளிக்கப்படவில்லை. எனினும், அவற்றை தங்கள் ஜீவனோபாயத்திற்காக தேடி அடைந்தார்கள் என்பது தான் உண்மை. இது, பொருளாதார ரீதியாக பெண்களுக்கு அரை விடுதலையை பெற்று தந்தது.

### *சவுக்கடி*

பொருள் வரும் வழியை, பொருளை உருவாக்கும் முறையை, அதன் பயனாய் ஒரு கௌரவமான வாழ்க்கையை பெண்கள் அறிந்த பின் ஆண்தான் 'பொருள் செய்பவன்' என்ற வழக்கொழிந்தது. ஆண்களுக்கு அவர்களைப் பற்றியே இருந்த பிரமைகளும், பெண்கள் ஆண்கள் பால் வைத்திருந்த பிரமிப்பும் கழன்று விழுந்தன. பொருளாதாரம் தந்த அரை விடுதலை ஆணாதிக்கத்திற்கு சவுக்கடியாய் விழுந்தது.

பெண்கள், இந்த அரை விடுதலையின் பயனாகக் கற்றுக் கொண்ட வேதம் நிகர்த்த சொல் "ஏன்"? என்பதாகும். ஆணுக்குப் பெண் ஏன் தாழ்ந்தவளாக இருக்க வேண்டும்? ஏன் இரண்டாம் பிரஜையாக வேண்டும்? பெண்களுக்கு என்று தனியாக விருப்புகளும் வெறுப்புகளும் ஏன் இருக்கக் கூடாது? பெண்களுக்கு என்று தனி லட்சியங்கள், சுய சிந்தனைகள், நண்பர்கள், மனதிற்குப் பிடித்த பழக்க வழக்கங்கள் ஏன் இருக்கக் கூடாது?

### *துணை அல்ல; இணை!*

கேள்விகள் பூதாகாரமாக வெளிப்படத் துவங்கின. ஒரு பிரளயம் போல பெண்களின் கருத்துப் புரட்சி நிகழ ஆரம்பித்தது. அதுகாறும் பெண்கள் தலைமேல் சுமத்தப்பட்டிருந்த 'எல்லாம் விதியால்' என்னும் மூட நம்பிக்கை இற்று வீழ்ந்தது. இது, 'விதியல்ல சதி' என்று அவர்கள் கண்டு கொண்டார்கள். 'நாங்கள் ஆண்களுக்குத் துணை அல்ல; இணை' என்று எண்ணத் தலைப்பட்டார்கள். கல்லையும், புல்லையும் அவர்கள் புருஷர்களாக ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள். அன்பற்ற, காதலற்ற, நேசமற்ற, புரிதல் அற்ற, குடிகாரர்கள், கயவர்கள், சோரபுத்திரர்கள், கொடுமைக்காரர்கள், இம்சிப்பவர்கள், அவமானப்படுத்துபவர்களை, அவர்கள் கணவர்களே ஆனாலும் தயங்காமல் புறக்கணித்தார்கள்.

இந்தத் தார்மீக ஆவேசம், வாழ்க்கை பற்றிய இந்தப் புதிய கருதுகோள், விதி என்கிற பழமைத் தளத்தை அகற்றி புதிய அஸ்திவாரத்தைப் போட்டுக் கொடுத்தது. சுதந்திரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சுதேசி மக்களைப் போல பெண்களும், தங்களுக்கு சுதந்திரம் கிடைத்து விட்டது, தாங்கள் அதைப் பெற்று விட்டோம் என்ற மாய நம்பிக்கையில் அல்லது பிரமையில் உழலத் தலைப்பட்டார்கள்.

பெண்கள் விடுதலை இயக்கமே, பெண்களின் இந்த மனோபாவ மாறுதலுக்குத் தலையான காரணம். அந்த வகையில் மகளிர் விடுதலை இயக்கங்கள் மகத்தான சாதனை செய்திருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொள்வோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



### கால் கிலோ அல்வாவும், கை நீள மலர்ச்சரமும்

ஆனால், நாணயத்தின் மறுபகுதி இன்னும் பார்க்கப் படாமலேயே இருக்கிறது. இந்த தேசத்தில் பெண்கள் மட்டுமே அடிமைகள் அல்ல. ஆண்களும் கூடத்தான். பெண்களை ஒரு மனோபாவ மாறுதலுக்கு உட்படுத்திய அளவில் இந்த இயக்கங்கள் வெற்றி பெற்றதே அல்லாமல் ஆண்களை சுட்டு விரல் நீட்டிக் கூட தொட்டு விடவில்லை. பெண்களை இருபத்தியோராம் நூற்றாண்டின் மனோபாவ நிலைக்கு நாம் தள்ளிவிட்டு விட்டோம். ஆண்களோ இன்னும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேதான் பாதம் பதித்து நிற்கிறார்கள். கால் கிலோ அல்வாவும், கைநீள மலர்ச்சரமும் ஒரு பெண்ணை தங்கள் கைவசப்படுத்தும், அவளை திருப்திபடுத்தும் என்று நம்புகிறார்கள். இன்னமும் கூட பெண் பின்தூங்கி முன்எழுபவள் என்றே கருதுகிறார்கள். தங்களைத் தெய்வங்களாகப் பாவித்து, பெண்கள் ஆராதித்துக் கொண்டே இருக்கவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். பெண்கள் இன்னும் தங்கள் மனைவிகளாகவும், சகோதரிகளாகவும், தாயாகவும், மகளாகவும் மட்டும் தான் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் மனுஷிகளாக இயங்குவதை மறுக்கிறார்கள். பெண், கணவனைச் சார்ந்தும், மகனைச் சார்ந்தும்தான் இருக்க வேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்களே தவிர, அவர்களுக்கு தனிக்கூரைகள் இருக்க முடியாது என்றே இன்னும் எண்ணுகிறார்கள். இது, இல்லறத்தேரின் ஒரு பக்கத்தில் குதிரையையும் மறுபக்கத்தில் கழுதையையும் பூட்டியது போல கேலிக்கூத்தாக மாறி விடுகிறது. பழைய மதிப்பீடுகளில் புதைந்து கிடைக்கும் ஆண்மகன், புதிய மதிப்பீடுகளில் கிளர்ந்தெழும் பெண்மணிக்கு எப்படி இணை யாவான்?

ஆவதில்லை. ஆகவே, மனவிரிசல்களும், மணமுறிவுகளும், தற்கொலைகளும் நிகழத் துவங்கியுள்ளன. ஒரு ஆண் மகனின் குரூரம் தாங்காது விலகிய பெண்ணை சமூகம் ஒரு தாயாக இருந்தல்லவா அரவணைத்து ஆதரிக்க வேண்டும்? ஆறுதல் அல்லவா வழங்க வேண்டும்? யதார்த்தத்தில் அப்படி நடப்பதே இல்லை. சமூகம், அவளைக் கீழ்ப்பார்வையோடுதான் பார்க்கிறது. ஒரு விலங்கிடமிருந்து தப்பித்து வந்த பெண்ணை ஆயிரம் விலங்குகள் சூழ்ந்து கடித்துக் குதறிப் போடுகின்றன. இல்லறம் என்னும் கொதி வாணலியில் இருந்து வெளியேறத் துடிக்கும் பெண்ணுக்கு கை கொடுக்கவில்லை என்றாலும் கை நீட்டிக் குற்றம் சொல்லாமலாவது இருத்தல் ஒரு சமூக நாகரீகம் அல்லவா? இதையும் நாம் இழந்து நிற்கிறோம்.

### தூண்டப்படும் தற்கொலைகள்

மணவிலக்குப் பெற்ற, அல்லது தனித்து வாழ நிச்சயித்த ஒரு பெண்ணை, அவளை பெற்றெடுத்த தாய் கூட விரும்புவதில்லை. உற்றார், உறவினர்களும் ஒரு அவமானச் சின்னம் என்றே ஒதுக்குகிறார்கள். தெருவாரும், ஊராரும் அவள் பட்ட துன்பங்கள் என்ன என்பதை அறியாமலேகூட வசை பொழிகிறார்கள். அவள் பணியாற்றும் அலுவலகத்தில் அவளுடன் வேலை செய்பவர்கள் அவளைச் சுலபமானவளாக, ஒரு மாதிரியானவளாகக் கருதி, அணுகி, அல்லல் விளைவிக்கிறார்கள். அந்தப் பெண் ஓடுகிறாள்; வாழ்வின் எல்லைக்கே ஓடுகிறாள். அந்த எல்லை என்பதும் ஆக்கொடியவர்களின் கரங்களுக்கு அப்பாற்பட்டதல்ல என்று ஆகும் போது, அவள் தற்கொலை புரிந்து கொண்டாவது வாழ்வைத் தாண்டி விட எத்தனிக்கிறாள்.

வாழ்வில் வராமலே தள்ளித் தள்ளிப் போகின்ற வசந்தத்துக்காக ஏங்கியே சில இளம்பெண்கள் இறந்து போகிறார்கள். சமூகத்தின் ஏற்றத் தாழ்வான அளவு கோல்களால் பெண்களே பெரிதும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். வரதட்சணைக் கொலையும், கற்பழிப்பினால் நிகழும் கொலையும் ஆணாதிக்கத்தின் சின்னங்களேயாகும்.

பெண்களைக் குறித்த பழைய மதிப்பீடுகளைச் சுமந்து திரியும் ஆண்களால், பெண்கள் அமைதி இழக்கவும், இல்லறமே சுமையாகவும் மாறிவிடச் செய்கிற நிலைகள் நிலவுவதைப் பெண்கள் இயக்கங்கள் கணக்கில் எடுத்துக் கொண்டு இனி ஆணின் மூளைக்குள், ஆத்மாவுக்குள் ஒரு புதிய வெளிச்சத்தை புகுத்தியாக வேண்டும்.

பெண், இன்று முச்சந்தியில் நிற்கிறாள். பழைமை ஒரு பாதையாகவும், புதுமை மறு பாதையாகவும், மரபு ஒரு வழியாகவும், நாகரீகம் மற்றொரு வழியாகவும் திகழ்கிற சாலைச் சந்திப்பின் மையப் பகுதியில் நின்று கொண்டு எந்தத் திக்கில் பயணத்தைத் தொடர்வது என்ற தெளிவில்லாமல் திகைக்கும் உயிராய் இருக்கிறாள். உடல் சார்ந்த செயல்பாடுகள் மட்டுமே ஒழுக்கத்தைத் தீர்மானிப்பவை என்ற கருத்துக்கு சமூகம் உடன்பட்டு நிற்கும் வரை நாகரீகம் பகல் கனவே. பெண்ணை ஒரு மனுஷியாக, ஒரு உயிராக, ஆசாபாசங்கள் கொண்ட மானுட ஜீவனாக கருதும் காலமே ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழும் காலமாகும்.

www.tamilarangam.net

# காலமடா காலம் இது காலில் விழும் காலம்

இன்றைய ஜனநாயக உலகத்தையே வெட்கித் தலைகுனியச் செய்யும் பழக்கம் ஒன்று தமிழக அரசியல் மேடைகளில் அரங்கேறிவருகிறது. கட்சித் தலைவர்களின் கால்களில் விழுந்து வணங்குவதே அது.

இதற்கு முன்பெல்லாம் தங்கள் இஷ்டபூர்வமான தலைவர்களின் இஷ்டபூர்வமான தேவைகளை நேர்த்திக் கடனாக செலுத்தி வந்தது ஒரு கூட்டம். நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பகிரங்கமாக மேடைகளில், இவர்கள் தலைவர்களின் காலில் விழத் தொடங்கி விட்டார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் தங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்களே என்ற வெட்கம் கொஞ்சம்கூட இல்லாமல் இந்தக்காரியத்தைச் செய்யத் துணிந்து விட்டார்கள். ஆசை, வெட்கம் அறியாது அல்லவா?

தேர்தலை ஒட்டி ஜெயலலிதாவின் உண்ணாவிரதம் கோலகலமாக சென்னை நகரில் நடைபெற்றது. உண்ணாவிரதப் பந்தலை நோக்கி, ஒரு கூட்டம் ஓடோடி வந்தது. என்னவென்று ஆச்சரியத்தோடு பார்த்தால், கூட்டத்தோடு வந்தவர்கள் ஒவ்வொருவராக பக்தி பரவசத்தோடு ஜெயலலிதாவின் காலில் விழத் துவங்கினார்கள்.

### *மண்டியிட்ட மாவீரன்*

குண்டர்கள் சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையிலிருந்து வெளியே வந்தார் ஒரு மாவீரர். அவர் வேறு யாரும் இல்லை. நமது தாமரைக்கனிதான். ஜெயலலிதா எதிர்ப்பில் முன்னணியில் இருந்த காலத்தில் வாங்கிய மாவீரன் பட்டத்தையும், அம்மையாரின் பாதங்களில் சமர்ப்பித்து விட்டு இவரும் விழுந்து வணங்கினார்.

தேர்தல் களத்தில் அ. தி. மு. க. வின் சார்பில் போட்டியிட்ட கிட்டதட்ட எல்லா வேட்பாளர்களும் முதலில் 'கால் வணக்க'த்தைத் முடித்துக் கொண்டுதான் மற்ற தேர்தல் பணிகளை செய்யத்துவங்கினார்கள். சேடப்பட்டி முத்தையாவும், கடம்பூர் ஜனார்த்தனமும் கூட இந்த பட்டியலில் அடங்குவார்கள். வயதும், அனுபவமும் மிகுந்த இவர்கள், தங்கள் சுயகௌரவத்தை இழந்ததற்கு பரிசாக, ஜெயலலிதா, இருவருக்கும் பாராளுமன்ற அ. தி. மு. க. தலைவர் பதவியையும், பாராளுமன்ற அ.தி.மு. க. கொறடாப் பதவியையும் வழங்கினார் போலும்.

### *தத்தளித்த தத்துவமுத்து*

அ. தி. மு. கவுடன் கூட்டணி கண்ட காங்கிரஸ் கட்சியும், இந்த நடைமுறையையே பின்பற்றியது. தேர்தல் பிரச்சாரத்திற்காக தமிழ்நாடு வந்த ராஜீவ் காந்தியை சுற்றி, ஈக்களைப்போல் தொண்டர்கள் மொய்த்தார்கள் வேட்பாளர்கள் சரமாரியாக காலில் விழுந்து வணங்கினார்கள்.

இந்த சம்பவங்களால் தர்மசங்கடத்திற்குள்ளானவர் காளிமுத்து. கருவாடு மீனாகாது, கறந்தபால் மடிபுகாது போன்ற தத்துவங்களை அள்ளி வீசிய காளிமுத்துவை மக்கள் இன்னமும் மறக்கவில்லை; அதற்குள் காலில் விழுந்தால், தன்மானமிக்க தமிழ் மக்கள் தனக்கு எதிராக வாக்களித்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம் ஒரு பக்கம்; ராஜீவ் காந்திக்கு கால் வணக்கம் செய்யவில்லை என்றால், பாராளுமன்ற கதவுகள் தனக்காக திறக்காமலேயே போய்விட்டால் என்ன செய்வது என்ற பயம் மறுபக்கம். இருதலைக் கொள்ளி எறும்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போல் தவிக்கத் துவங்கிவிட்டாராம் அவர். ஆனால் எப்படியோ கடைசி நேரத்தில் காலில், விழாமல் நழுவிவிட்டார்.

தமிழ் நாட்டு அரசியல் மேடைகளில் தலைவர்களின் கால்களில் பகிரங்கமாக விழுவது இலை மறைவு, காய் மறைவாக இருந்து வந்தது. மூத்த கலைஞர்களின் காலைத் தொட்டுக் கும்பிடும் வழக்கம் நாடக, சினிமா நடிகர்களிடம் உண்டு. எம். ஜி. ஆர். தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், இந்தப் பழக்கம் தொடர்ச்சியாகி-சினிமா நடிகர்கள் எம். ஜி. ஆரின் காலில் விழுந்து வணங்கினார்கள். மேடையிலேயே, பழம் பெரும் நடிகர் எம். கே. ராதா, இந்தி நடிகர் அசோக்குமார்-ஆகியோரின் காலைத் தொட்டு எம். ஜி. ஆர். வணங்கியதாகக் கூறப்படுகின்றது. இவை, எல்லாவற்றிற்கும் மூத்த தலைவர்களிடம் ஆசி பெறுதல் என்று விளக்கம் தந்தார்கள். இந்த வழியைப் பின்பற்றி கட்சித்தலைவர்களும். எம். ஜி. ஆரிடம் ஆசிபெறத் துவங்கினார்கள்.

## காலில் விழுந்த கலெக்டர்

எம். ஜி. ஆர். காலத்தில் இந்தக் காலில் விழும் அசிங்கங்களுக்கெல்லாம் சிகரம் வைத்த







தைப் போல ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. செங்கல்பட்டு மாவட்ட கலெக்டராக அப்பொழுது பணியாற்றிய பாண்டியன் எம். ஜி. ஆரின் காலில் விழுந்தார்.

தமிழ் நாட்டின் வரலாறு, நாட்டுபுறக் கலைகள் பற்றிய ஆராய்ச்சிகளை புதிய நோக்கில் செய்வதற்கு தஞ்சையில் ஒரு பல் கலைக்கழகம் துவங்கப் பட்டது. அகத்திய லிங்கம் என்பவர் இந்தப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராக வந்து சேர்ந்தார். அப்போது தமிழ் நாட்டில் கவர்னர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. காலில் விழுந்தவர்களுக்கெல்லாம் தான் தான் 'சூப்பர் ஸ்டார'ாக வேண்டும் என்று கருதி, மேடையிலேயே அலெக்ஸாண்டர் காலில் விழுந்து வணங்கினார் அகத்தியலிங்கம்.

## தமிழர் மரபு

வழிபாட்டுமுறை தமிழ் நாட்டிற்கு புதிதான ஒன்றல்ல. இறைவன், அரசன், குடும்பத்திலுள்ள பெரியவர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள் என்று வகைப்படுத்தி, தங்கள் அன்பையும், பக்தியையும் தமிழ் மக்கள் செலுத்தி வந்துள்ளார்கள்.

ஒவ்வொரு சமுதாயத்திலும் ஏதாவது ஒரு புதிய மரபு தோன்றுவது தவிர்க்க முடியாத தேவை ஆகும். முன்னோர்களுக்கும், இதைப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போலவே இறைவனும், அரசனும் தேவைப் பட்டு உள்ளது. தங்களை கடவுளும், அரசனும் தான் காப்பற்ற வேண்டும் என்ற நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஆரம்பத்தில் கடவுள் பக்தியும், அதன் பின்னர் அரசனின் மீது ஒரு விதமான பக்தியும் மக்களுக்கு ஊட்டப்பட்டது.

### தியாகராஜரின் சுயமரியாதை

இறைவனையும், அரசனையும் வழிபடும் முறை இருந்தது என்பது உண்மைதான் என்றாலும், அது கண்மூடித்தனமாக இல்லை. "இராமபிரானை பாடிய வாயால் உன்னைப் பாடமாட்டேன்" என்று மன்னனுக்கு எதிராக வெடித்தெழுந்த தியாகராஜர்... நாமார்க்கும் குடியல்லோம்" என்று பல்லவ மன்னனிடம் பிரகடனம் செய்த திருநாவுக்கரசர் ஆகியோர், செல்வம், அதிகாரம் ஆகியவற்றிற்கு அடிமையாகப் போகும் கோழைத்தனத்திற்கு எதிராக முழக்கமிட்டவர்கள்.

ஜனநாயக நாட்டில் கடவுள் பக்தியைப் போல, அரச பக்தியைப் போல அரசியல் தலைவர்களின் மீதும் ஒரு விதமான தனிமனித பக்தி திட்டமிட்டு உருவாக்கப்பட்டது. தனி மனித பக்தியின் மிக மோசமான வெளிப் பாடாகத்தான், இந்தக் காலில் விழும் வழக்கங் கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தனிமனித வழிபாடு அல்லது தனிமனித பக்திக்கு எதிராக முற்போக்கு, ஜனநாயக உணர்வு கொண்டவர்கள், இந்தச் சமூக அவலங்களை எதிர்த்தும், கண்டித்தும் கலாச் சார ரீதியாக போராட்டம் நடத்தாமல் இல்லை. ஆனாலும், கலாச்சார ரீதியாக பின் தங்கிய நிலைமையுள்ள நாடுகளில் இத்தகைய 'மாயை' நிலைகொள்ள வாய்ப்புகள் இருக் கின்றன.

பின்தங்கிய முதலாளித்துவ நாடுகளில் உள்ள பிரத்யேக சூழ்நிலையில் சில தலைவர் கள் தோன்றிவிடுகின்றார்கள். தாய் தந்தை, குடும்ப பாரம்பரியங்களின் அறிமுகத்தை அடிப் படையாகக் கொண்டு சிலர் அரசியலில் முக்கியத்துவம் பெற்றுவருகின்றார்கள். இந்த நூற்றாண்டின் மிக முக்கியமான கலைவடிமான திரைப்படத்தில் அறிமுகமாகி பிரபலமாகிவிடு கின்றனர். மக்களை தற்காலிகமாக ஏமாற்றும் கலையில் தேர்ந்தவர்களும் கூட வெற்றி பெற்று விடுகின்றார்கள.

சமூகத்தில் தாங்கள் பெற்ற அங்கீகாரத்தை தக்க வைத்துக் கொள்வதும், அதை மேலும் விரிவாக்குவதும் இவர்களுக்கு பிரச்சினையாகி விடுகின்றது. எனவே வெற்று பலூனில் காற்றை ஊதி மிகப் பெரிதாக காட்டுவதைப் போல இந்த வகைப்பட்ட தலைவர்கள், புகழ் என்னும் காற்றடைக்கப்பட்டு மக்களிடம் வேடிக்கை காட்டப்படுகின்றார்கள்.

கொள்கை அடிப்படையில் தொண்டர் களையும், கட்சிகளையும் வளர்க்க இயலாத அரசியல் கட்சிகளுக்கும் இந்த 'காற்று நிரம்பிய பலூன்கள்' தேவைப்படுகின்றன.

இதை அடிப்படையாகக் கொண்டுதான் மேடைகளில் போலி வீரர்களும் உண்மைற்ற வாய்ச்சொல் வீரர்களும் பெருகி விடுகின்றார் கள். இவர்களை இந்திரன், சந்திரன் என்று புகழும் துதிபாடும் கூட்டமும் வளர்ந்து விடு கின்றது. மக்களுக்கும் இவர்களுக்கும் ஒரு இடைவெளியை வேண்டுமென்றே திட்டமிட்டு இவர்கள் உருவாக்குகின்றார்கள். இந்த இடைவெளி, இந்தத் தலைவர்களின் தகுதிக்கு மீறிய பிரமைகளை வளர்ப்பதற்கு சாதகமாக அமைகிறது.

உலகத்தை சுற்றிவராமல், சிவபெருமானை யும், பார்வதியையும் சுற்றி வந்து, உலகமே நீங்கள்தான் என்று மாம்பழத்தை வாங்கிச் சென்ற பிள்ளையாரைப் போல, தலைவர்களை திருப்திப்படுத்தி, தங்கள் காரியங்களை சாதித்து கொள்ளும் ஒரு மாதிரியான அடிமை கள் கூட்டம் தோன்றியது. தலைவர்களுக்கு எங்கு அரிப்பெடுத்தாலும் சரி, சொறிந்து விடு கின்ற அளவிற்கு இந்தக் கூட்டம் தயாரானது.

தனிமனித வழிபாட்டை ஏற்றுக் கொண்ட கும்பல்களிலேயே மிகவும் கடைந்தெடுத்த பிற்போக்குத்தனமான இந்தப் பகுதியினர்தான் 'காலில் விழும்' பழககத்தையும் மிகவும் முனைப்போடு செய்து கொண்டிருக்கின்றது. மன்னராட்சி காலத்தில் அடிமையாய் வாழ்ந்த மக்கள், பூட்டப்பட்டிருந்த விலங்குகளை உடைத்து பாராளுமன்ற முறையை உருவாக் கினார்கள். நாட்டிற்கு ஒரே ஒரு மன்னன் மட்டும் வேண்டாம்; எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்ற புதிய சகாப்தம் எழுந்தது.

முதலாளித்துவ, பாராளுமன்ற முறைதான் இது என்றாலும், நிலவுடைமைச் சமுதாயம் அல்லது மன்னர் ஆட்சி காலத்தில் இல்லாத சமத்துவத்தையும், ஜனநாயகத்தையும் மக்கள் போராடிப்பெற்றார்கள். இதில் மனிதனுக்கு மனிதன் வேறுபாடு கிடையாது என்ற சமத் துவம் முக்கியமானது. ஆனால் இந்தக் கூட்டமோ தனது அற்ப சுகங்களுக்காக மனிதகுலம் இதுவரை போராடிப் பெற்ற, உரிமைகளையெல்லாம் மீண்டும் தனி மனிதர்களின் கால்களில் மண்டியிட வைக்க முயற்சிக்கின்றது.

— மித்ரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எங்கள் பக்கம்

## பெண் என்பதால் இழிவுபடுத்துவதா?

புதிய இளைஞன் ஜனவரி மாத இதழில் ''ஒரு பொய்க்கால் குதிரையின் பந்தய கனவு'' என்ற கட்டுரையில் அ. தி. மு. க. வின் கவர்ச்சி அரசியல் வியாபாரத்தை வெளிச்சம் போட்டு காட்டியது பாராட்டுக்குரியதுதான். ஆனால் செல்வி ஜெயலலிதாவை அவர் பெண் என்ற காரணத்தினாலேயே சிலர் வசை பாடுவதைப் போல், 'குமரிப் பெண்ணின் தலையில் பேரிடி!', 'பார்வையின் பாவம் அகம் பாவம்' போன்ற நக்கல் தொனியைத் தவிர்த்திருக்கலாம். பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுக்கும் 'புதிய இளைஞனில்' இந்தத் தொனியை எதிர்பார்க்கவில்லை.

— வசந்தா ரத்தினவேலு மாநிலச் செயலாளர்
இந்திய தேசீய மாதர் சம்மேளனம், சேலம்.

ஜனவரி மாத இதழின் அட்டைப் படம் மிகமிக பிரமாதம். பார்த்தவுடன் திகைத்து விட்டேன். உள்ளே புரட்டினால் ஆஹா... அருமை. தேர்ந்தெடுத்த சொற்கள்; ஆழ்ந்த கருத்துக்கள். சில உண்மை கதைகளையும், நாட்டில் நடக்கும் அக்கிரமங்களையும் இடையிடையே பிரசுரித்தல் நன்றாக இருக்கும்.

— பி. முத்துசாமி AIYF குன்னூர் தாலுகா
செயலாளர் எடப்பள்ளி.

அ. தி. மு. க. வின் கவர்ச்சி அரசியல் வியாபாரம் பற்றிய கட்டுரையும், நடிகை ஷபனா ஆஸ்மியின் எழுச்சிமிகு பேட்டியும் அருமை. மற்ற கட்டுரைகளும், அட்டைப் படங்களும் வெகு ஜோர். 'புதிய இளைஞன்' பல புதிய இளைஞர்களை உருவாக்குவது நிச்சயம். வாழ்த்துக்கள்!

— எஸ். ஞானராஜ் அறந்தாங்கி

மசாலா பத்திரிக்கைகளைப் படித்து சீரழிந்துகொண்டிருக்கும் இளைஞர் பட்டாளத்தை, நல்ல சிந்தனை ஓட்டத்தில் சேர்க்கப் புறப்பட்டு வந்த 'புதிய இதயமே (இளைஞனே), உன்னை வாழ்த்துகிறேன்; வரவேற்கிறேன்.

— எஸ். எ. பாரதி. அம்பத்தூர் எஸ்டேட்
சென்னை-58.

புதிய இளைஞன் ஜனவரி 90ல் வெளியாகியுள்ள ''பொய்... பொய்... முழுப்பொய்... புலனாய்வுப் பத்திரிக்கைகள்'' என்ற கட்டுரை சிறப்பாக இருந்தது. கட்டுரையாசிரியர் கூறியுள்ள செய்திகள் அனைத்துமே அப்பட்டமான உண்மை. இதில் சில தினப்பத்திரிக்கைகளும் கூட அடங்கும். உண்மைகளை எழுதியதற்கு நன்றி.

— சா. சுப்பிரமணியன், எம். ஏ. எம். இடி...
தியாகத்துருகம்

புதிய அரசிடம் மக்களுக்கு இருக்கும் புதிய நம்பிக்கையைக்கோடிட்டு காட்டிய தலையங்கம். நாட்டை நலிவுபடுத்த முயலும் மதவாதிகளின் முகமூடியைக் கிழித்து, மக்கள் இயக்கங்களுக்கு உள்ள மதிப்பை வெளிபடுத்திய சித்ராவின் கட்டுரை — சினிமா உலகைக் கெடுத்தச் சீமான்கள், அரசியலையும் அசிங்கப் படுத்துவதைச் சாடி, இவர்களை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்த, இளைஞர்களை மக்கள் இயக்கத்திற்கு அழைத்த பாரதியின் படைப்பு— நடிகர், நடிகைகள் என்றாலே தேவலோகத்து இந்திரர்கள், ரம்பைகள் என்ற நிலையை மாற்றி, அற்புதமான மக்கள் சாதனம் சினிமா மூலம் மக்கள் பணிபுரியும் ஷப்னா ஆஸ்மியின் பேட்டி — அரசியல் கிசுகிசு பத்திரிக்கைகளை அப்புறப்படுத்த வேண்டிய தேவையை உணர்த்திய சங்கர்லாலின் கட்டுரை — எதிர்காலத்தில் குழந்தைகள் பற்றி நாம் அதிகமாகச் சிந்திக்க வேண்டும் என உணர்த்திய ராதா — இப்படி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்லா அம்சங்களும் புதிய இளைஞனின் புத்தி கூர்மையை எமக்குப் புரிய வைத்தது.

— மன்னை இரா. காமராசு, மேலவாசல்.

'புதிய இளைஞன்' ஜனவரி மாத இதழைப் பார்த்தவுடன் மிக்க மகிழ்ச்சியுற்றேன். முக்கிய மாக கார்ட்டூன்கள் நகைச்சுவையாக இருக்கின்றது. அதேசமயம் சிந்திக்கவும், உண்மையை உணரவும் வைத்துள்ளது. 'அரசியல் கடைகளை திறக்கும் சினிமா நடிகர்கள்' என்ற கட்டுரை ரசிகர் மன்ற இளைஞர்களுக்கு ஒரு நல்ல பாடம். படித்தால் நிச்சயம் திருந்துவார்கள். இதே போன்று, சமூக விழிப்புணர்வுள்ள நல்ல நல்ல கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியீடுவீர்கள் என்று நம்புகிறேன்.

— ஜி. சங்கர் (பெல்) உறையூர் திருச்சி-3.

அநேக பக்கங்களில் இடைவெளிகள் அதிகமாகக் காணப்படுகிறது. அவற்றை வீணாக்காமல், அவற்றில் துணுக்குச் செய்திகளை இடம்பெறச் செய்யுங்கள். மேலும் இயக்கச் செய்திகளுக்கும், ஸ்போட்சுக்கும் அதிக பக்கங்களை ஒதுக்குங்கள்.

— எம். காளைலிங்கம். AIYF நகரத்தலைவர் காளையார் கோவில்.

'புதிய இளைஞன்' முதல் இதழைப் படித்தேன். நன்றாக இருந்தது. இளைஞர்களைப் பற்றிய செய்திகள் அதிகம் இருத்தல் அவசியம். எதிர்வரும் இதழ்களில் மார்க்சிய—லெனினிய சிந்தனையுடன் கட்டுரைகளை வெளியிடுங்கள்.

— எஸ். தமிழரசன், கீரமங்கலம்.

ஒரு சலிப்புடன்தான் பக்கங்களைப் புரட்டினேன். படிக்க ஆரம்பித்தவுடன்... வாவ்... நிமிர்ந்து உட்கார்ந்து ஒரே மூச்சில் படித்து முடித்தபிறகுதான் — நான் உட்காரவே இல்லை, நின்று கொண்டிருந்தேன் என்பது தெரிந்தது... ஒரே இதழுக்குள்ளாக உள்ளடக்கத்தில் வந்துள்ள மாற்றங்கள் நன்றாக இருக்கிறது. கட்டுரைகள் அனைத்தையும் ஏதோ ஒரு திறமையான சிற்பியின் கரங்கள் செதுக்கியதா?! கட்டுரைகளின் ராஜ கம்பீரத்திற்கு மகுடம் சூட்டினாற்போன்ற தலைப்புகள். எங்கிருந்து சார் உங்களுக்கு இந்த அட்டைப் படங்கள் கிடைக்கிறது?...

— எஸ். அன்வர் ஷாஜி AIYF நீலகிரி மாவட்டச் செயலாளர் கூடலூர்.

இதழின் முகமும், இதயமும் உணர்ச்சி கரமாய் இருந்து. இன்றைய இடதுசாரி அதி தீவிரப்போக்கு உட்பட்ட மத்தியதரவர்க்க அறிவுத்துறையினரின் ஆர்வப் போக்குக்கு நம்மிடம் ஒரு சரியான பத்திரிகை இல்லாதது கூட, அவர்களை திசைமாறச் செய்திருக்கும். புதிய தேவைகளுக்கு ஏற்றவாறு, புதிய வடிவத்தில் நவீனமாய் வெளிவரும் புதிய இளைஞனுக்கு வாழ்த்துக்கள்.

— ஹெச். ஜி. ரசூல் மாநிலச் செயலர், தமிழ் நாடு கலை இலக்கிய பெருமன்றம் - மதுரை-7.

ஜனவரி மாத இதழில் வெளியான அரசியல் கடைகளைத் திறக்கும் சினிமா நடிகர்கள் என்ற தலைப்பில் வெளியான கட்டுரை கலைத் துறையையும், அரசியலையும் களங்கப்படுத்தும் 'லூஸ்' போன்றவர்களுக்கு ஒரு பாடமாக அமைந்துள்ளது.

— P. பெரியசாமி AIYF வட்ட செயலர், கள்ளக்குறிச்சி.

புதிய இளைஞன் இரண்டாம் இதழில் பின் பின் அட்டையின் கவிதை வெகுசிறப்பு. 'வெண்மணி நினைவாக' பின்அட்டை உள்பக்க ஓவியம் மேலும் ஒரு முத்தாய்ப்பு. பக்கங்களை கூடுதலாக்கி, உலகச் செய்திகளை வெளியிட்டால் மேலும் சிறப்பாக இருக்கும். முகப்பு ஓவியம் சந்துருவுக்கும் பாராட்டுகள்.

— சி. சிவலிங்கம் எம். ஏ., கோடியூர். தருமபுரி மாவட்டம்.

'பொய்... பொய்... முழுப்பொய்... புலனாய்வுப் பத்திரிக்கைகள்' என்ற கட்டுரையில் சொல்லப்பட்ட செய்திகள் அனைத்தும் உண்மை. வாசகர்களைக் குருடர்களாக்கும் இந்த 'பரபரப்பு பத்திரிக்கைகளு'க்கு விரைவில் ஒரு முடிவு கட்ட வேண்டும். வியாபார நோக்கத்திற்காகவும், தனது அரசியல் எதிரிகளுக்காகவும் பத்திரிகை நடத்தி வருபவர்களைப் 'புதிய இளைஞன்' போன்ற எழுச்சிமிகு நடுநிலையான பத்திரிக்கைகள் வீழ்த்திவிடும்— என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

— எஸ். எஸ். மணியன், AIYF, தெற்கு வள்ளியூர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமெரிக்க ஆக்கிரமிப்பைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

மத்திய அமெரிக்காவில் மேற்கத்தியத் தீவுகளுக்கு அருகே உள்ள சின்னஞ்சிறு நாடு பனாமா. இந்த நாட்டின் அதிபர் நொரீகா மீது போதை மருந்து கடத்தல் சம்பந்தமாக அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் பட்டுள்ளது. இதைக் காரணமாக வைத்து கடந்த மாதம் பனாமாவை அமெரிக்கப் படைகள் முற்றுகையிட்டன. உலக நாடுகளும், பல ஜனநாயக, மனித உரிமை அமைப்புகளும் இதைக் கண்டித்துக் குரல் கொடுத்தன.

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றமும் (AIYF), அனைத்திந்திய மாணவர் பெரு மன்றமும் (AISF) அமெரிக்காவின் இந்த ஆக்கிரமிப்புச் செயலைக் கண்டித்து குரல் எழுப்பின. சென்னையிலுள்ள அமெரிக்க தூதரக அலுவலகம் எதிரே, நூற்றுக்கணக் கான இளைஞர்களும், மாணவர்களும் ஆர்ப் பாட்டம் நடத்தினர். டிசம்பர் மாதம் 29ஆம் தேதியன்று நடந்த இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சென்னை மாவட்ட இளைஞர் பெருமன்றக் குழு ஏற்பாடு செய்திருந்தது. அன்றைய தினம் மாலை 4 மணிக்கு ராஜாஜி மண்டபத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு இளைஞர்கள் அமெரிக்க தூதரகத்தை வந்தடைந்தனர்.

இளைஞர் பெருமன்ற சென்னை மாவட்டச் செயலாளர் கோட்டீஸ்வரன், மாணவர் பெரு மன்ற மாவட்டச் செயலாளர் பாலாஜி ஆகி யோர் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் நடந்தது.

இளைஞர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் வீரபாண்டியன், எம்.எஸ். தாவூத், மாதவன், எம். சம்பத் ஆகியோர் உரை யாற்றினர். □

## பலீங்...கபடிக் கபடி...

பலீங் கபடிக் கபடி... பலீங் கபடிக் கபடி... எங்க ஊரு ஆஸ்பத்திரிக்கு பெண் மருத்துவரை நியமனம் செய்... கபடிக்கபடி... எம். எஸ். வேண்டும்... எம். டி. வேண்டும்... ஈ. என். டி. ஸ்பெஷலிஸ்ட் வேண்டும்...! இது என்ன! நூதன கபடி விளையாட்டாக இருக்கிறதே! வேறொன்றுமில்லை. சூரனை துவம்சம் செய்த திருச்செந்தூர் அரசு மருத்துவமனையின் அவலத்தைக் கண்டித்து அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஜனவரி 17ஆம் தேதி காலையில் நடந்த புதுமையான ஆர்ப்பாட்டம்தான் இது.

''கபடிக்கபடி... மனு கொடுத்தாலும் கவனிக்க மாட்டோம். கபடிக்கபடி... ஆர்ப் பாட்டம் பண்ணினாலும் அசரமாட்டோம்... கபடிக்கபடி...'' என்று பாடி வந்தார் தமிழக அரசு அணித் தலைவரும், சி. பி. ஐ நகரச் செயலாளருமான ஆர். வைகைராஜ். முதலில் பாடி வந்தவர் மக்கள் அணிதலைவர் ராஜா மணி. AIYFன் நகரச் செயலாளரும் இவரே.

மீண்டும் மக்கள் அணி சார்பில் இளைஞர் பெருமன்ற தோழர் நாராயணன் ஆக்ரோச மாகப்பாடி வந்தார். ''அமைச்சர் தொகுதி ஆஸ்பத்திரியில் மருந்து இல்லை... ஆப்ரேசன் பண்ண ஜெனரேட்டர் இல்லை... கபடிக்கபடி... விடமாட்டோம்... விடமாட்டோம்... தமிழக அரசின் தூக்கத்தைக் கலைக்கமால் விட மாட்டோம்... கபடிக்கபடி....''

இப்படியாக இந்த போராட்டம் பத்து நிமிடங்கள் நீடித்தது. மக்கள் அணியின் கை ஓங்கியிருந்த நேரம், அதுவரை 'சும்மா' இருந்த காவல்துறையினர் தங்கள் கைவரிசை யைக் காட்ட ஆரம்பித்தனர். ஆம் ஏழை, எளிய மக்களுக்கு நோய் தீர்க்கும் மருத்துவராக இருக்க வேண்டிய அரசு மருத்துவமனையே ஒரு நோயாளியாக இருப்பதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்திய தோழர்கள் அனைவரும் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

அரசு மருத்துவமனையின் சீர்கேடுகளைக் கண்டித்து, பல முறை அனைத்திந்திய இளைஞர் பெருமன்றமும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் போராட்டம் நடத்திஉள்ளனர். மருத்துவமனையில் மின் விசிறி வசதிக்குறைவைக் கண்டித்து, நோயாளிகளுக்கு கைவிசிறி வழங்கும் போராட்டத்தை கடந்த ஆண்டே AIYF நடத் தியது.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஒரு போராளியின் வாழ்க்கை ஒப்பந்தம்

கண்ணனூர் : ஜனவரி 7ஆம் தேதி வடக்கு மலபார் வர்த்தக சபை மண்டபத்தில் கேரளா முன்னாள் முதல்வரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருமான பி. கே. வாசுதேவன் தலைமையில் ஒரு திருமண நிகழ்ச்சி நடைபெறுகிறது...

மணமக்களிடம் வாசுதேவன் மோதிரங்களை எடுத்து கொடுக்க, இருவரும் மாற்றிக் கொள்கின்றனர். வாசுதேவனின் ரத்தின சுருக்கமான வாழ்த்துரையுடன் இத்திருமணம் பத்தே நிமிடங்களில் நிறைவுறுகிறது.

அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் (AIYF) அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் து. ராஜாவுக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில குழுவின் உறுப்பினர் தோழியர் ஆன்னி தாமஸுக்கும் நடந்த திருமண நிகழ்ச்சிதான் இது.

ஜனவரி 10ஆம் தேதி சென்னையில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. ''பாலன் இல்லத்தில்'' நடந்த இந்த நிகழ்ச்சியில் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி பேசினர். புதுமணத் தம்பதிகளுக்கு புதிய இளைஞனின் வாழ்த்துக்கள். □

இத்தனைக்கும் பிறகும், அரசு செவி சாய்க்காததன் எதிரொலியே இந்த நூதன கபடி போராட்டம். இந்தப் போராட்ட கபடி விளையாட்டின் நடுவர்களாக தோழர் சண்முக ராஜாவும், வழக்கறிஞர் டி. ஆர். எஸ். இராமமூர்த்தியும் இருந்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்செந்தூர் தாலுகா செயலாளர் கே. சுடலை ''கபடி விளையாட்டை'' கொடி அசைத்து துவக்கி வைத்தார். AIYF சிதம்பரனார் மாவட்டச் செயலாளர் வெ. சங்கர கிருஷ்ணன், கலை இலக்கிய பெருமன்றத்தைச் சேர்ந்த களத்தை பீர் முகமது, தோழர் கல்யாண சுந்தரம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். □

## சித்திரமாய் வாழும் கலைஞன்

பத்திரிக்கைகள் படிக்கும் பழக்கம் உள்ளவர்கள் எவரும் கார்டூனிஸ்ட் சங்கர் பிள்ளையை அறிந்திராமல் இருக்கமுடியாது அந்த அளவுக்கு கேலி சித்திரங்கள் வரைவதில் தனக்கென ஒரு தனிப்பாணியை வகுத்துக் கொண்டு, அந்தத் துறையில் கொடிகட்டி பறந்தவர் சங்கர் பிள்ளை. எந்த தலைவர்களையும் தனிப்பட்ட முறையில் தாக்காமல், அவர்களது அரசியல் நடைமுறைகளை எவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் கேலி சித்திரங்களில் வெளிபடுத்திய அற்புதக்கலைஞர் அவர். தொடக்க காலத்தில் 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிக்கையில் பணிபுரிந்து வந்த சங்கர் பிள்ளை, கேலிசித்திரங்களுக்கென்றே தனியாக ஒரு இதழையும் வெளியிட்டு வந்தார். 'சங்கர்ஸ் வீக்கிலி' என்ற பெயரில் அந்த இதழ் வெளிவந்தது. 27 வருஷங்களாக தொடர்ந்து வெளியான ஒரே கார்ட்டூன் இதழ் என்ற பெருமை இதற்கு உண்டு. சம்பவங்களை வெறுமனே படங்களாக வரையாமல் அரசியல் பிரக்ஞையுடனும், சமூகப் பார்வையுடனும் கூடிய ''சித்திர பாடத்தை'' படைத்த கௌரவம் சங்கர் பிள்ளைக்கு மட்டுமே சொந்தம்.

சாசுவதமான படைப்புகளை நமக்குச் சொந்தமாக்கிவிட்டு, சமீபத்தில் மறைந்த அந்த மாபெரும் கலைஞனின் நினைவாக இந்த இதழில் இரண்டு கேலிசித்திரங்களை வெளியிட்டுள்ளோம். □

## 'புதிய இளைஞனுக்கு' நிர்வாகக் குழு

இன்றைய காலத்தில் மக்கள் தொடர்பு சாதனத்தின் அவசியம் கருதி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற தமிழ் மாநிலக் குழுவின் நீண்டகால முயற்சியின் பயனாய், புதிய உத்வேகத்தோடு உதித்துள்ளான் 'புதிய இளைஞன்'. பிரபல வார, மாத இதழ்களின் வியாபாரரீதியான வெற்றி என்பது அவற்றின் ஒழுங்கமைக்கப்பட்ட நிர்வாக அமைப்பின் அஸ்திவாரத்தில்தான் அமைந்துள்ளது. பல்வேறு முற்போக்கு பத்திரிக்கைகள் நிர்வாக அமைப்பில் கவனம் செலுத்தாதினால், அவை சில இதழ்களுக்குப்பின் காணாமல் போய் விடுவது வழக்கம். அந்தப் பட்டியலில் புதிய இளைஞனும் சேர்ந்து விடக்கூடாது என்ற கவலையும், அக்கறையும் நமக்கு நிறையவே உள்ளது இதனால் புதிய இளைஞனின் விற்பனை, வினியோகம், சந்தா உட்பட இதர நிர்வாக விஷயங்களை கவனிக்க ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. முரளி, திலக், சிவசங்கரன், பூபதி, நீலப்ரியன், தா. இசக்கி ஆகிய தோழர்களைக் கொண்ட, புதிய இளைஞனின் இந்த நிர்வாக அமைப்புக்கு தோழர் முரளி பொறுப்பாளராக இருக்கிறார். AIYFன் ஒவ்வொரு மாவட்டக குழுவும் இதே போன்று நிர்வாக அமைப்பை ஏற்படுத்தலாம். □

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 'அவாளுக்கு அடிமேல் அடி'

விசுவ ஹிந்து பரிஷத், ஆர். எஸ். எஸ். இந்து முன்னணி போன்ற மதவெறி அமைப்புகளின் அரசியல் ஒலிபெருக்கியான பாரதீய ஜனதா கட்சிக்கு அயோத்தியில் மரண அடி (நாடாளுமன்றத் தேர்தல் தோல்வி) கிடைத்தது தெரிந்ததே. இதுபற்றி கடந்த இதழில் ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தது நினைவிருக்கலாம்.

இராமன் அவதரித்தாகக் கூறப்படும் அயோத்தியில் மட்டுமல்லாது, இராமாயண கதை நடைபெற்றதாகக் கருதப்படும் இடங்களில்கூட, வகுப்புவாதிகளை ராமபிரான் மன்னிக்கவில்லை என்ற புதிய, ருசிகரத் தகவல் தெரிய வந்துள்ளது.

**பக்ஸர் :**

விசுவாமித்திர முனிவரின் குருகுலத்தில், தசரத புத்திரர்கள் வில்வித்தை உள்ளிட்ட ஆயகலைகள் அனைத்திலும் பயிற்சி எடுத்த பகுதிகளை உள்ளடக்கியதுதான் பக்ஸர். இது பீகார் மாநிலத்தைச் சார்ந்த ஒரு நாடாளுமன்ற தொகுதி. கடந்தாண்டு இறுதியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில், இந்தத் தொகுதியில் பாரதீய ஜனதா கட்சியின் வேட்பாளரை வீழ்த்தி வெற்றி வாகை சூடியது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரே! இந்த வெற்றிக்குச் சொந்தக்காரர் தோழர் தேஜ் நாராயணசிங்.

**மதுபானி :**

சீதாபிராட்டியை, அண்ணல் ராமன் முதன் முதலாக 'நோக்கிய' மிதிலையை உள்ளடக்கிய தொகுதி இது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் இந்தத் தொகுதியில் போட்டியிட்ட தோழர் யோகேந்திரஜா வகுப்புவாதிகளை புறமுதுகிட்டு ஓடச்செய்து, பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இதுவும் பீகார் மாநிலத்தை சார்ந்த நாடாளுமன்றத் தொகுதியே.

**சீத்தாமர்ஹி :**

பூமாதேவியின் புதல்வி என்று கூறப்படும் சீதையை, ஜனகன் கண்டெடுத்த இடம் இந்தத் தொகுதியைச் சார்ந்தது. அந்தோ பரிதாபம்! மதவெறி செப்படி வித்தகர்களுக்கு இங்கே வைப்பு தொகையே (டிப்பாசிட்) பறிபோனது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவுடன் போட்டியிட்ட ஜனதாதள வேட்பாளருக்கு இந்தத் தொகுதி மக்கள் வெற்றி மாலை சூட்டினர்.

**பாண்டா :**

இராமாயண மூலக்கதை வால்மீகி முனிவரால் இயற்றப்பட்ட விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததே! காலங்காலமாகப் பேசப்பட்டு வரும் இந்த இதிகாசத்தை எழுத வால்மீகி முனிவர் தேர்ந்தெடுத்த இடம் 'சித்திரகூட்'. இது உத்திர பிரதேசத்தின் பாண்டா நாடாளுமன்றத் தொகுதியைச் சார்ந்தது. சீத்தாமர்ஹியைப் போலவே இந்தத் தொகுதிவாசிகளும் வகுப்புவாதிகளின் முகத்தில் கரியைப் பூசியனுப்பினர். வெற்றி வாகை சூடிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் ராம் சஜீவனை அடுத்து அதிக வாக்குகள் பெற்றது பகுஜன் ஜாமஜ் கட்சி வேட்பாளரே. வகுப்புவாதிகளுடன் கள்ளக்காதல் கொண்டுள்ள காங்கிரஸ் கட்சிக்கு மூன்றாவது இடம். மத வாதிகளின் அரசியல் போர்வையான பாரதீய ஜனதா கட்சி வேட்பாளருக்குக் கிடைத்தது — நான்காவது இடம்தான்!


*வாழ்த்துகள்*

**பாலன் இன்ஜினியரிங் கம்பெனி**

54, குப்புசாமி ராஜா தெரு
தென்காசி ரோடு
இராஜபாளையம்-626 117

www.tamilarangam.net

# இளவேனில் அவர்களே நீங்களுமா இப்படி...

மனிதர்களுக்குள் மலைக்க வைக்கும் அற்புதங்கள் நிறைந்திருப்பது மறுக்க முடியாத உண்மை. அதே போல் மனிதர்களுக்கிடையில் வாழும் சிலரிடையே வக்கிரங்கள் புதைந்து கிடப்பதும் ஒத்துக்கொள்ள வேண்டிய நிஜம். இந்த 'வகையறா'வில் பதிதாக ஒருவர் சேர்ந்திருக்கிறார்.

அவர் ஒரு கவிஞர்; கட்டுரையாளர்; பேச்சாளர். இவை எல்லாவற்றுக்கும் மேலாக அவர் ஒரு இடதுசாரி சிந்தனையாளர். அவரது பெயர் இளவேனில்.

'எய்ட்ஸ்' : மேற்கத்திய நாடுகளில் நிலவும் அழுகிப்போன கலாசாரத்தின் நன்கொடை. உலகம் முழுவதும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கும் பயங்கர உயிர்க்கொல்லி நோய்.

'பெரஸ்த்ரோய்க்கா' : சோவியத் சமூகத்தில் கோர்பச்சேவ் அறிமுகப்படுத்தியிருக்கும் 'மறுசீரமைப்புத்திட்டம்'. கடந்த காலத்தவறுகளை திருத்திக் கொள்ளவும், சோவியத் சமுதாயத்துக்கு ஒரு புதிய பரிமாணத்தை அளிக்கவும் கோர்பச்சேவ் மேற்கொண்ட ஒரு பரிசோதனை முயற்சி.

என்ன இது! எய்ட்ஸ், பெரஸ்த்ரோய்க்கா ...இரண்டுக்கும் என்ன சம்பந்தம்? சுத்த பேத்தலாக இருக்கிறதே! புரிகிறது... நீங்கள் கோபம் பொங்கக் கேட்பது புரிகிறது.

அறிமுகப்படுத்தப்பட்ட சில நாள்களிலேயே, உலகின் அனைத்து மொழிகளாலும் உச்சரிக்கப்பட்ட சொற்கள் இரண்டாம். ஒன்று 'எய்ட்ஸ்' ஸாம்! மற்றொன்று 'பெரஸ்த்ரோய்க்கா'வாம்! இது இளவேனிலின் அரிய கண்டுபிடிப்பு. மலைக்க வைக்கும் ஒப்பீடு!

'நெஞ்சின் அலைகள்' என்ற தலைப்பில் 'நமது நிருபர்' இதழில், இவர் தொடர்ந்து எழுதி வருகிறார் அந்த வரிசையில், சமீபத்தில் வெளிவந்த ஒரு கட்டுரையை இப்படித்தான் இளவேனில் துவக்கியிருக்கிறார். (என்னே! ஒரு அலை!)

இந்தக் கட்டுரையில் 'பெரஸ்த்ரோய்க்கா'வையும், கோர்பச்சேவையும், தனது அரசியல், தத்துவ, உலக ஞானத்தின் ஒட்டுமொத்த பலத்தைக்கொண்டு கடுமையாக விமர்சித்திருக்கிறார் இளவேனில். யாரும், எப்போது வேண்டுமானாலும், எதைப்பற்றியும் விமர்சனம் செய்யலாம் என்பதில் நமக்கு கருத்துமாறுபாடில்லை. ஆனால், 'எப்படி வேண்டுமானாலும்' என்பதைத்தான் நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

'பெரஸ்த்ரோய்க்கா' பற்றி இளவேனில் முன்வைத்துள்ள வாதங்களை மறுப்பது நமது நோக்கமல்ல. (இதற்கு, அவர் வாதங்களை ஏற்றுக்கொள்கிறோம் என்று பொருளல்ல) ஒரு சோஷலிச சமூகத்தில், காலத்தின் தேவைக்கேற்ப கொணரப்பட்டுள்ள ஒரு மாற்றுத்திட்டத்தை 'எய்ட்ஸ்' நோயுடன் ஒப்பிட்டுக் கொச்சைப்படுத்தியுள்ள இளவேனிலை விமர்சிப்பதே நமது இலக்கு. விஷயம் தெரிந்த ஒருவர், (அப்படித்தான் நம்புகிறோம்!) அதுவும் தன்னை இடதுசாரிகளுக்கெல்லாம், இடதுசாரி என்று அழைத்துக் கொள்ளும் ஒருவர், குறைந்தபட்ச நாகரிகத்தைக்கூட கடைப்பிடிக்காமல், 'எய்ட்ஸ்' நோயுடன் 'பெரஸ்த்ரோய்க்கா'வை ஒப்பிட்டிருப்பதை அப்பட்டமான வக்கிரம் என்றழைக்காமல்வேறு எப்படி அழைப்பது?

"'எய்ட்ஸ்' ஆனாலும், 'பெரஸ்த்ரோய்க்கா' ஆனாலும், இரண்டுமே சீரழிவினால் பற்றும் நோய்களே." இதுவும் இளவேனில் கண்டுபிடிப்புதான். இப்போது, அவருக்குள்ள நோய் என்னவென்று புரிகிறதல்லவா?

இந்தக்கட்டுரைக்குப்பிறகு வெளிவந்த இன்னொரு 'நெஞ்சின் அலைகளிலும்', இளவேனில் எழுதியிருப்பதைப்படித்தால் அவர் மீது பரிதாபப்படுவதைத்தவிர வேறு வழியில்லை.

'பதவிக்கு வந்தான் குருசேவ்'; 'கென்னடியுடன் குருசேவ் கைகுலுக்கினான்'; 'ரீகனுடன் கோர்பச்சேவ் கைகுலுக்கினான்'... இப்படித்தான் அவரது மனோநிலை வெளிப்படுகிறது. குருசேவ், கோர்பச்சேவ் போன்றோரை ஒருமையில் அழைத்திருக்கும் இளவேனில், "பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்களுடன் ஸ்டாலின் கைகுலுக்கினார்" என்று ஸ்டாலினை மட்டும் மரியாதை கொடுத்து அழைத்திருக்கிறார். இது எதில் சேர்த்தி என்று புரியவில்லை!

எழுத்தில் ஒரு நாகரிகம் இருக்கிறது. அதைப்பாகுபாடின்றி, குறைந்தபட்ச அளவுக்கேனும் கடைப்பிடிப்பது அவசியம்தானே. இளவேனிலுக்கு இது கூட தெரியாதா? இல்லை! தெரியும். பிறகு... ஏன் இப்படி எழுதுகிறார்? இந்தக் கட்டுரையின் இரண்டாவது வாக்கியத்தை ஞாபகப்படுத்திக்கொண்டால் இதற்கு விடை கிடைக்கும். நிற்க.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரஜ்னீஷ் : ஆடம்பரத்தில் ஊறிய மேல் தட்டு வர்க்கத்தினரின் மனஉளைச்சலுக்கு 'மருந்து' கொடுத்தவர். பாலுறவுக் கட்டுப்பாடுகளே எல்லாப்பிரச்சினைகளுக்கும் காரணம்; அதனால்தான் மனிதன் வாழ்க்கையின் உச்சபட்ச நிலையை அடையமுடியவில்லை என்ற புதிய தத்துவத்தை(!) பரப்பி கோடிக் கணக்கான சொத்துகளுக்கு அதிபதியான நவீன சாமியார்தான் இந்த ரஜ்னீஷ். உலகெங்கும் பல இடங்களில் ஆசிரமங்களை அமைத்து 'சுதந்திரமான பாலுறவை' ஊக்குவித்து, தானும் அந்தச் சுதந்திரத்தில் ஊறித் திளைத்தவர்.

இந்த ரஜ்னீஷ் ஒரு கம்யூனிச ஆதரவாளராம்(!?). சமீபத்தில் 'நக்கீரன்' இதழ் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில், கோர்பச்சேவின் சீர்திருத்தம் பற்றி ரஜ்னீஷ் சாமியார் விமர்சித்திருக்கிறார்.

"நான் முழுக்க, முழுக்க கம்யூனிசத்தை ஆதரிக்கிறேன்... ஆனால், சோஷலிசத்தை எதிர்க்கிறேன். சோஷலிசம் என்பது முதலாளித்துவத்துடன் செய்து கொள்ளும் சமரசமே" என்று ரஜ்னீஷ் அந்தக் கட்டுரையில் பிதற்றியிருக்கிறார். இதையெல்லாம் 'சீரியஸாக' எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதில்லை. யாரும், எதையும், எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால், சொல்பவர் எப்படிப்பட்டவர் என்பதை வைத்தே விஷயத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள முடியும்.

'கம்யூனிசத்துக்கும், சோஷலிசத்துக்கும் என்ன வித்தியாசம்?' என்று ஒரு சீடர் கேட்டதற்கு, "இரண்டுக்கும் பெருத்த வித்தியாசம் உண்டு; அதாவது எனக்கும், தோழர் கோர்பச்சேவுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறதோ அதே வித்தியாசம்..." என்று ரஜ்னீஷ் பதிலளித்திருக்கிறார். இந்த நூற்றாண்டில் இதைவிடச் சிறந்த நகைச்சுவை இருக்க முடியாது.

ஆனால், ஒரு விஷயத்தை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளத்தான் வேண்டும். ரஜ்னீஷ் பைத்தியக்காரத்தனமாக உளறியிருந்தாலும், கண்ணியத்துடன் தனது வாதத்தை முன்வைக்கிறார். 'பெரஸ்த்ரோய்க்கா'வை எய்ட்ஸ் நோயுடன் ஒப்பிட்டுக்கூறவில்லை. இத்தனைக்கும், இளவேனிலை விட எய்ட்ஸ் பற்றி ரஜ்னீஷ் சாமியாருக்கு அதிகமாகவே தெரிந்திருக்கும். (இது போல, இளவேனிலுக்கும் 'பெரஸ்த்ரோய்க்கா' பற்றி ரஜ்னீஷைவிட அதிகமாகவே தெரிந்திருக்கும்.) கோர்பச்சேவை தோழர் என்று மரியாதையுடன் குறிப்பிடுகிறார். 'செக்ஸ் சாமியார்' என்று அழைக்கப்படும் ரஜ்னீஷிடம் உள்ள நாகரிகம் கூட இளவேனிலிடம் இல்லாததுதான், நமக்கு அதிர்ச்சியாகவும், வருத்தத்தை அளிப்பதாகவும் இருக்கிறது.

முன்னொரு காலத்தில் மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி ஆதரவாளராக இருந்த, இளவேனில், அதற்குப் பிறகு அவர் கடந்து வந்த பாதைபற்றி யாருக்கும் அதிகமாகத் தெரியாது. எளிதிலும் புரியாது! இப்போது 'சொந்தமாக' புரட்சி நடத்திக்கொண்டிருப்பதாகக் கேள்வி. மேடைகள் கிடைத்தால், இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியையும், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியையும் புதுப்புது வார்த்தைகளைக் கண்டுபிடித்து ஏசுவது இவருக்குப் பிடித்தமான பொழுதுபோக்கு. இதெல்லாம் ஒருபுறமிருந்தாலும், 'உண்மையான கம்யூனிஸ்டு' என்று தன்னைப் பிரகடனப்படுத்திக்கொள்ளும் இளவேனில். இந்த அளவுக்கு தரம் தாழ்ந்து போய் விட்டாரே என்பதுதான் நமது ஆதங்கம்.

பரபரப்பாக ஏதாவது எழுத வேண்டும்; அதை எல்லோரும் பேசவேண்டும் என்ற வேட்கையில், விவாதத்திற்குரிய விஷயங்களை கொச்சைப்படுத்துவது இளவேனில் போன்றோருக்கு அழகல்ல.

சோவியத் யூனியனில் கோர்பச்சேவ் செய்துவரும் சீர்திருத்தங்களும், குறுகியகாலத்தில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட பெரும் மாற்றங்களும் உலகம் முழுவதும் பல கேள்விகளையும், சர்ச்சைகளையும் கிளப்பியுள்ளது. இது பற்றி ஓர் ஆரோக்கியமான விவாதத்துக்கு தூபமிடுவதுதான் இந்திய இடதுசாரி சிந்தனையாளர்களுக்கு இன்றைக்குள்ள பொறுப்பு; கடமை. அத்தகைய ஒரு பொறுப்புள்ள பரிவர்த்தனையைத்தான் இளவேனிலிடமிருந்தும் நாம் எதிர்பார்த்தோம். முதல் சுற்றிலேயே அவர் நம்மை ஏமாற்றிவிட்டார். பரவாயில்லை.

அவரிடமுள்ள குறைபாடுகளையெல்லாம் மீறி, இன்னமும் அவர்மீது நமக்கு நம்பிக்கை இருக்கத்தான் செய்கிறது. உலகில், அனைத்து மொழிகளாலும் உச்சரிக்கப்பட்ட சொற்கள் நிறைய இருக்கின்றன. அவற்றில் நல்லதும் உண்டு; கெட்டதும் உண்டு. நல்லதை எடுத்துக் கொண்டு, அடுத்த சுற்று விவாதத்தை இளவேனில் தொடங்குவார் என்று எதிர்பார்ப்போம். மீண்டும் 'எய்ட்ஸ்' பாணியில் இளவேனில் இறங்கினால், அவரது சிவப்புச் சாயம் வெளுத்து 'மஞ்சள்' எட்டிப்பார்க்கும்; மறைந்திருக்கும் உண்மை அம்பலமாகும்.

— ஜிக்கி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய இளைஞன்

இனி ஒரு
விதி செய்வோம்!

இதழ் : 3
பிப்ரவரி, 1990

விலை ரூ. 2

தனிச்சுற்றுக்கு மட்டும்

ஆசிரியர் :
மகேந்திரன்

ஆசிரியர் குழு :
தேவ. பேரின்பன்
மு. வீரபாண்டியன்

தொடர்புக்கு :
புதிய இளைஞன்
பாலன் இல்லம்
19, தெற்கு போக் ரோடு
தி. நகர், சென்னை-17

அச்சு : இராசகிளி பிரிண்டர்ஸ்
சென்னை-20

## வேலைபெறும் அடிப்படை உரிமைச் சட்டத்தை ஜீவனுள்ளதாக ஆக்கவேண்டும்

இந்திய அரசியலமைப்பு சட்டம், தனது குடிமக்களுக்கு பேச்சு சுதந்திரம், எழுத்துச்சுதந்திரம் முதலான அடிப்படை உரிமைகளை எல்லாம் வழங்கியது. ஆனால் வேலை பெறுவதும், இந்த அடிப்படை உரிமைகளில் ஒன்று என்று ஏனோ உணராமல் போயிற்று.

சுதந்திரம் பெற்றபின் எத்தனையோ போராட்டங்கள். வேலை பெறுவது எங்கள் உரிமை என்பதற்கான முழக்கங்கள். விளைவு புதிய தேசீய முன்னணி அரசு வேலை பெறுவதை அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. பல ஆண்டுகள் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் கட்சி, நினைத்துக் கூட பார்க்காத ஒரு விஷயத்தை நிறைவேற்ற முயற்சிக்கும் தேசீய முன்னணி அரசாங்கத்தை பாராட்டத்தான் வேண்டும்.


வெற்றிபெற்ற ஒவ்வொரு உரிமைகளுக்கும் பின்னால் ஒரு பெரிய தியாக வரலாறு நிச்சயம் இருக்கும். இடதுசாரி இளைஞர், மாணவர் அமைப்புக்கள் பல காலம் தொடர்ந்து நடத்திய இயக்கங்களை, இந்த நேரத்தில் நினைவுகூராமலிருப்பது அறிவுடைமையாகாது.

வேலை வேண்டும் என்ற கோஷம் எழுந்தாலும், ஓட்டம் வந்தாலும்—அதனை எதிர்ப்பதற்கென்றே சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். வேலை யாரும் தருவதோ, பெறுவதோ அல்ல ; தனிப்பட்ட மனித முயற்சியால் உருவாக்கிக் கொள்ள வேண்டியது என்கிறார்கள் இவர்கள். தனிமனித முயற்சியால் வேலையை நம் நாட்டில் உருவாக்கிக் கொள்ள முடியுமா ? குடிமக்களிடம் வரி வசூலிப்பதில், ஆண்டு தவறாமல் பட்ஜெட் தயாரித்துக் கொண்டிருக்கும் அரசாங்கம், வேலை தருவதற்குரிய பொறுப்பை ஏற்க வேண்டாமா ?

காலத்தின் அவசியம் உணர்ந்து, வேலை பெறுவதை, அடிப்படை உரிமையாக்கும் இந்த முயற்சியில், குறைபாடுகளும் இல்லாமல் இல்லை. தொழில் வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றை முறையாக திட்டமிட்டு வளர்க்காமல், எல்லோருக்கும் வேலை கொடுக்க முடியாது. தேசீய முன்னணி அரசாங்கம்—இந்த கடமைகளை மேற்கொள்ளாவிட்டால், வேலைபெறும் உரிமை என்பது வெறும் காகித சட்டமாகத்தான் இருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆகாரமே ஆட்கொல்லியானால்
ஆவேசம் யாருக்குத்தான் வராது ?
வழிகாட்ட வேண்டிய கல்வி
இப்படி சுமையாகலாமா ?
சிறுவனே
உனது கோபம்
நியாயமானதுதான்-ஆனால்
நிரந்தரமானதல்ல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெல்சன் மண்டேலா : விடுதலைப் போராட்டத்தின் மறுபெயர்.

'OSAI'
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE



'1962
ஆகஸ்டு
5 ஆம் நாள்முதல்
இன்று வரை
சிறைப்பட்டிருந்த
மண்டேலாவை
தென்னாப்பிரிக்க
நிற வெறி அரசு
மக்கள் போராட்ட
பேரலை முன்
அடிபணிந்து
விடுதலை செய்துள்ளது.
'விடுதலை பெற்று
வெளியே
வரவேண்டும்
என்பதற்காக
எனது
பிறப்புரிமையை
நான் விற்க முடியாது
மக்களது
பிறப்புரிமையையும்
நான்
விற்கத் தயாரில்லை'

என்று
முழக்கமிட்ட
நெல்சன்
மண்டேலாவை
நேசத்தோடு
நெஞ்சு நிமிர்த்தி
வரவேற்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்